சொர்ப்பனத் துயில் விடுத்து உண்மை உலகு காணுங்கள்

Phone No. 4502
(விலை அணா ஒன்று)
Regd. No. M. 5458
[இலங்கை 10 சதம்]

மாலை மணி

ஆசிரியர்: C. N. அண்ணாதுரை M.A.
MALAI MANI
(திராவிடத் தமிழ்த் தினசரி - கருத்திதழ்)

மணி 1 | சென்னை (13-12-49) ஐ வெளியீடு (14-12-49) | இதழ் 115

நாடாள வந்தோரை நல்லறிஞர் குட்டுகிறார்!

———:0:———

சீனாவில் கம்யூனிஸ்டு வெற்றி இந்திய சர்க்கார் சிந்தை தெளிவிக்குமா?

சமூக, பொருளாதார சீர்கேடுகள் மறைய வேண்டிய அவசியம் பற்றி எம்.என். ராய்

"சமூக, பொருளாதார பேதாபேதங்கள் நிறைந்த எந்த நாட்டிலும் கம்யூனிஸம் வேரூன்றி விடும் என்பது உறுதி. இந்திய சர்க்கார் உண்மை நிலையை உணரப் பெற்றவர்களாய், திறக்கவுள்ள கதவோடு, சமூக, பொருளாதார முன்போக்கு வேலைகளை மேற்கொள்ளாத பட்சத்தில், கம்யூனிஸம் ஈண்டு வந்து நிலைபெற்றும் பரவுவதை அவர்களால் தடுக்க முடியாது. கம்யூனிஸம் சீனாவில் வெற்றி கண்டிருப்பது இதர ஆசிய நாடுகளையும் தொல்லைக்குச் சூழப்போகிறதென்பதற்கு ஒரு முன்னறிவிப்பேயாகும். சீனா வரை வந்து விட்ட கம்யூனிஸம், இதர நாடுகளிலும் வந்து பரவுவது இயல்பே.

ஆங்கிலோ-அமெரிக்க நாடுகள் மீது ரஷ்யா குறிப்பிடத்தக்க அளவில் வெற்றி கண்டுவிட்டதென்றாலும், சீனாவில் கம்யூனிஸ்ட் வெற்றி பெர்லின் முற்றுகையைப் பயன்படுத்திக் கொண்டு ரஷ்யா தன்னைச் சுற்றி சோவியத் ஆதரவு நாடுகளைப் படைத்து வைத்துக்கொண்டிருக்கிறது. இதனால் நன்மையென்னவெனில், சோவியத்துக்கும் மேற்கத்திய நாடுகளுக்குமிடையே வருங்காலத்தில் தகராறெதுவும் ஏற்படும் பட்சத்தில், ஆசியா [illegible] ரஷ்யாவுக்குத் தாக்குதலில் இருக்க வாய்ப்பில்லை"

ஆசியாவின் 'மர்ம மனிதர்' என்ற வரலாற்றுச் சிறப்புடைப் பெயர் பெற்றவரும், தீவிர ஜனநாயகவாதியும், உலகப் பொருளாதாரத் துறைகளில் பற்பல அம்சங்களையும் விஞ்ஞான ரீதியிலாழ்ந்து முடிவுகட்டக்கூடிய பொருளியல் வல்லுநரும், 'ரேடிகல் ஹ்யூமனிஸ்ட்' ஆங்கில வாரஇதழின் ஆசிரியரும், குடிமக்கள் உரிமைக்கும், ஏற்றத் தாழ்வற்ற சமூக பொருளாதார அமைப்பு நிறுவனத்துக்கும் பாடுபட்டு வருபவருமான இவ்வுபகண்ட அரசியல் வாதிகளனைவரைக் காட்டிலும் அறிவிலும் ஆராய்ச்சியிலும் பழுத்த, தீவிர கோட்பாடுகளுடைய அரசியலறிஞருமாகிய தோழர் எம். என். ராய் அவர்கள், புது டெல்லியில் உலக விவகார இந்திய கவுன்சில் கூட்டமொன்றில் கடந்த 10-ந் தேதியன்று பேசுகையில், மேற்கண்ட கருத்துக்களை வெளியிட்டு, இந்திய சர்க்காரை எச்சரித்தார்.

உண்மை நிலையை உள்ளவாறு அறிந்துணர்ந்து, ஆவன செய்க ஆட்சியாளர் என்று தோழர் ராய் அவர்கள் விடுத்துள்ள எச்சரிக்கைக் குறிப்பு, நேரு சர்க்காரின் நேரடியான உடனடிக் கவனத்துக்குரியதாகும். அரசியலில் நடுநிலைக்கொள்கை [illegible] கம்யூனிஸமென்று [illegible] கொலை, லாதகாரம் [illegible] சாக்குப்போக்குப் பேசும் கம்யூனிஸம் என்றும், ரஷ்யக் கூலிகளின் வர்ட்டுக் கூச்சலே [illegible] கம்யூனிஸமென்றும் அர்த்தமற்றப் பேச்சு

[illegible] அதிகாரம் [illegible] பதவி [illegible] 'சர்வாதிகார' உலகத்தில் சஞ்சரிக்கக்கூடாமல் [illegible] தெளிவுபடுத்தியுள்ளார் தோழர் ராய். கம்யூனிஸ்டுகள் என்று கூறும் [illegible] வரை அடக்கு முறைகளுக்குள்ளாக்கியும், அருஞ்சிறையில் வைத்தும், அஞ்ஞாதவாசத்துக்கு அனுப்பியும் —அவர்களால் வர இருந்த ஆபத்துக்களை சமாளித்துவிட்டோமென்று ஆறுமாந்திருப்பவரல்லர் ஆளவந்தார், அவர்கள் ஆபத்தை நோக்கித்தான் விரைவதாகக் கருதப்படுவார்களென்பதைக் குறிப்பில் உணர்த்தியுள்ளார் தோழர் ராய்.

பதவிப் போட்டி விஞ்சி, [illegible] பெருத்து, அரசியல் [illegible] காரணமாக ஒரு சிலர் மக்கள் மீது தணிக்கை விரும்புதல் [illegible] கம்யூனிஸம்; [illegible] அடக்குமுறைக்கும், அடிமைத்தனத்துக்கும் ஆளாகி, உயர்வு, தாழ்வு, பெருமை, நல்வாழ்வு இன்ன பிறவற்றை என்னவென்றே உணராது, படுகுழியில் வீழ்த்தப்பட்டுக் கிடக்கும் பல லட்சோபலட்சம் மக்களின் உள்ளத்திலெழுந்த உண்மைப் போராட்ட அலைகளின் ஓசையே கம்யூனிஸமென [illegible] இன்றைய முதலாளித்வ ஆட்சியாளருக்கு அறிவுறுத்தி [illegible] தோழர் ராய் [illegible] கூறியுள்ளார், 'சமூகப் பொருளாதார வேலைகளை சர்க்கார் மேற்

[தொடர்ச்சி 2-ம் பக்கம் பார்க்க]

"கம்யூனிஸ்டுகள் எளிதில் நுழைய சிவப்பு 'ஜமுக்காளம்' விரிக்கப்படுகிறது!"

தென்னாப்பிரிக்காவின் வெறிக் கொள்கை கம்யூனிஸத்துக்கு அன்பழைப்பே!

———(0)———

பிரிட்டிஷ் மிதவாதத் தலைவர் கலக்கம்

"கம்யூனிஸ்டுகள் எளிதில் புகுந்துவிடும் வகையில், சிவப்பு ஜமுக்காளத்தை விரித்துப் போடுகிறார் டாக்டர் டேனியல் மலான்" என்பதாக பிரிட்டனின் மிதவாதக் கட்சியின் தலைவர் [illegible] வேடி வயலட் போன் ஹாம் — கார்ட்டர் டிசம்பர் 10-ந்தேதியன்று தென்னாப்பிரிக்கப் பிரதமர் மீது குற்றஞ் சாட்டியுள்ளார்.

லண்டனில் மிதவாதக் கட்சிக் கூட்டமொன்றில் பேசுகையில், தென்னாப்பிரிக்க யூனியன் நிறவெறிக் கொள்கையைக் கண்டித்தார் லேடி வயலட்.

அவர் குறிப்பிட்டதாவது:— டாக்டர் மலானின் நிறவெறிக் கொள்கை, காமன்வெல்த்துக்குப் பெருங் கேடு விளைப்பதோடு, உலகில் அதன் நற்பெயரையும் கெடுத்துவிடும் வகையில் இருக்கிறது. நிறவெறிக்கொள்கை பாப்பரமானதாகும். கம்யூனிஸம் முளைத்துத் தழைப்பதற்கான வளத்தைத் தூண்டக்கூடியவையே அவை.

'இருபது லட்சம் வெள்ளையரும், 90 லட்சம் இதர மக்களும் வாழும் நாட்டில் அழிவு வித்துக்களையே ஊன்றிவருகிறார் டாக்டர் மலான்" என்று இறுதியாகக் குறிப்பிட்டார் லேடி வயலட்.

காற்று விசை மூலம் மின்சாரம்

லண்டன், டிச. 12—

பிரிட்டனுக்கு தேவையான மின்சாரத்தில், பத்தில் ஒரு பங்கை, காற்று விசை மூலம் உற்பத்தி செய்ய பிரிட்டன் ஒரு திட்டத்தை வகுத்திருக்கிறது. இதனால் 10 ஆண்டுகளில் 50,000,000 பவுன் மிச்சப்படுமாம்.

வியட்நாம் முழு உள்நாட்டு ஆதிபத்திய உரிமையெய்தும்

பாவ்தாய் சர்க்காரிடம் அதிகாரத்தை மாற்றும் பிரான்ஸ்

இந்தோ-சீனாவிலுள்ள பிரெஞ்சு அதிகாரிகள் இன்னும் ஒரு வார காலத்தில் வியட்நாம் சர்க்காருக்கு அதிகாரத்தை மாற்றி விடுவாரென கூறப்படுகிறது. அன்னாரின் முன்னாள் சக்கரவர்த்தி பாவ்தாய் அதிகாரத்தை ஏற்பார். இது பற்றிய ஒப்பந்தத்தை இன்னும் ஒரு வார காலத்தில் இந்தோ-சீனாவில் பிரெஞ்சு ஹைகமிஷனர் எம். லியான் பிக்னானும், பாவ்தாயும் கையெழுத்திட்டு முடித்துக் கொண்டாரெனத் தெரிகிறது.

இவ் ஒப்பந்தமூலம் பாவ்தாய் சர்க்காருக்கு முழு உள்நாட்டு ஆதிபத்திய உரிமையும் ஏற்பட்டு விடுகிறது. பிரெஞ்சு யூனியனுக்குள்ளாக வியட்நாமுக்கு சுதந்திர வுரிமையளித்து விடுவதென பிரான்ஸ் கடந்த மார்ச் 8-ல் ஒப்பந்தம் செய்துகொண்டு பிரகடனம் படுத்தியதை யொட்டி இவ்வேற்பாடு நடக்கிறது.

எலும்புகளைக் கொண்டே நோயை உய்த்தறியும் வழி

மருத்துவக் கல்லூரிப் பேராசிரியர் தரும் தகவல்கள்

சென்னை, டிச. 12—

'எலும்புகளைக் கொண்டே அவைகளுக்குடையவர் வாழ்ந்த நாளில் என்ன வியாதியினால் பீடிக்கப்பட்டிருந்தார் என்பதைக் கண்டுபிடிக்க முடியுமென்றும், இவ்விஷயமான ஆராய்ச்சியில் அதிக கவனம் செலுத்தப்படவில்லை என்றும், இதை பாடமாக வைக்காததும், ஆராய்ச்சிக்கு வேண்டிய சாதனங்களும் அளிக்காததும் வருந்தத் தக்கது என்றும் 'மெடிகல் காலேஜ்' வியாதிகள் பற்றிய விஞ்ஞானத் துறை பேராசிரியர் டாக்டர் பி. எஸ். சுப்பா ரெட்டி 'மெடிகல் காலேஜ்' கூட்டமொன்றில் பேசுகையில் கூறினார்.

கல்கத்தா மெடிகல் காலேஜ் பேராசிரியர் டாக்டர் பி. என். பானர்ஜி, ஆதிகால மனிதர்களின் வியாதிகள் என்கிற விஷயமாக மாஜிக் லாண்டர்ன் ஸ்லைடுகள் மூலம் எலும்புகள், எகிப்திய 'மம்மி'கள் முதலியவைகளை காட்டி விளக்கினார். எப்படி, அந்த எலும்புகளைக் கொண்டே அவைகளுக்குடையவர்களுக்கு ஏற்பட்ட காயம், வியாதி முதலியவைகளைக் கண்டுபிடித்துவிடலாம் என்று கூறினார்

மலான் வழிக்கு வருகிறாரா?

கேப்டவுன், டிச. 12—

ஆப்பிரிக்கர் கட்சியுடன் [illegible] தென்னாப்பிரிக்கா பிரதமர் டாக்டர் மலான் பார்லிமெண்டிற்கு ஆப்பிரிக்கர்களின் பிரதிநிதித்துவத்தைக் குறைக்கும் மசோதாவை இப்பொழுது ஒத்திவைத்துவிட்டார்.

பார்லிமெண்டுக்கு சுதேசிப் பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்படாது என்ற மசோதா [illegible] நிறைவேறினால், மலான் கட்சிக்கும், [illegible] கட்சிக்கும் கட்டுப்பட்ட உறவு முறிந்து, அதன் பலனாக மலான் சர்க்கார் வீழ்ச்சி ஏற்பட்டிருக்கும்.

மாலை மணி

சென்னை 13—12—49 செவ்வாய்க்கிழமை

'சுமைதாங்கும் மிருகம்!'

"மந்திரிகளாகிய நாங்கள் எங்கு சென்றாலும், உதவிச் சலுகை கோரும் விண்ணப்பங்கள், தனிப்பட்டவர்களாலும், பொது நிலையங்களாலும் எங்கள்முன் வைக்கப்படுகின்றன. நாங்கள் இதுகாறும் மக்களுக்குச் செய்துள்ள சேவைகள் காரணமாக எங்களுக்கு மக்கள் நன்றி செலுத்துவதில்லை. இது எங்களது துர்அதிர்ஷ்டமாகும்"

என்று, சென்னை நிதி அமைச்சர் தோழர் பி. கோபாலர் அவர்கள், ராஜமஹேந்தரத்தைச் சேர்ந்த காடியம் என்ற இடத்தில் பேசியுள்ளார்; இல்லை; இல்லை, கண்ணீர் வடித்துக் கதறியுள்ளார்!

மக்கள் சலுகைகள் கோருகிறார்கள்; செய்த சேவைகளுக்கு நன்றி செலுத்துவதில்லை-இது மந்திரி கோபாலரின் குற்றச்சாட்டு. மக்கள் சலுகைகள் கேட்கக் கூடாது; மந்திரிகளுக்கு நன்றிசெலுத்த வேண்டும்-இது நிதி அமைச்சர் நாட்டிலே காணவிரும்பும் காட்சி' மக்கள் நன்றி செலுத்தும் அளவுக்கு அறிவும், ஆற்றலும், தகுதியும், திறமையும் இன்றைய மந்திரி சபைக்கு இருப்பதாக நிதி மந்திரியார் எண்ணுகிறார்! பாராட்டுதலுக்கேற்ற தகுதி இன்றைய மந்திரிமார்களுக்கு இருக்கிறது என்றால், சிறுவர்களும்இருகை பொத்தி சிரிப்பார்களே! ஆனால் தோழர் கோபால அவர்கள் அழுதுகொண்டே கூறுகிறார் மக்கள் நன்றி செலுத்தாததற்குக் காரணம் "எங்களது துர்அதிர்ஷ்டம்!" என்று. "துர்அதிர்ஷடத்"தைத் துணைக்கழைத்துத் தமமுடைய நிலையைச சரிப்படுத்திக் கொள்ள முயலுகிறார் மந்திரியார். ஆனால் அறிவுடையுலகம் அதை ஒப்புக் கொள்ள மறுக்கிறதே!

நிதி மந்திரியார் மேலும் பேசும்போது குறிப்பிடுகிறார்,

"மக்கள், வரவேற்பிதழ்கள் என்ற பெயரில் தங்களுடைய தேவைகளை நீண்டபட்டியலாகத் தந்து, தங்களுக்கு உதவி செய்யுமாறு அரசாங்கத்தைக் கேட்கிறார்கள். இந்தத் துன்பக் கதைகளை கேட்டுக்கொண்டிருப்பது, மந்திரிகளின் படுதுன்பங்களாகி விட்டது. இம்மாதிரி நடைபெறுவதற்குக் காரணம் என்னவென்றால், மக்கள் மந்திரியை ஒரு சுமைதாங்கும் மிருகம் என்று எண்ணுவதேயாகும்' என்று.

மந்திரி வேலை பார்ப்பது சுமை தாங்கும் மிருகத்திற்குச் சமமாகத்தானிருக்கிறது என்பதைத் தோழர்கோபாலர் அவர்களும் அவரோடுஇணைந்து நிற்கும் ஏனைய மந்திரிமார்களும் முழுமனதாகஎண்ணுவார்களேயானால், அவர்கள் தாராளமாக இராஜினாமா செய்து விட்டு வெளியேறிவிடலாமே! 'சுமை தாங்கும்மிருகம்', என்ற உணர்வோடு, ஏன் மந்திரிகள் வேலை செய்ய வேண்டும்? மக்கள் கூறும் குறைகளைக் கேட்பதே, 'சுமை தாங்கும் மிருகமாக'த் தங்களைமாற்றிவிடுகிறது என்று எண்ணுகிறாரே அமைச்சர். உள்ளபடியே! குறைகளையெல்லாம் நிறைவேற்றித் தர முற்படுபவர்களாக மாறுவார்களேயானால், அப்பொழுது தங்களைப்பற்றி என்ன எண்ணிக் கொள்வார்களோ தெரியவில்லை! குறைகளை கட்பதையே ('அதைக் கவனித்துச் செய்வது பிறகு இருக்கட்டும்) மிகக் கடினமாக இந்த ஆளவந்த மந்திரியார் எண்ணுகிறாரென்றால், பின்பு எந்தக் காரியத்திற்காக மந்திரி வேலையைப் பார்க்கிறாரோ, தெரியவில்லை!

இப்பொழுது, மக்கள், எப்படித் தங்கள் குறைகளை அரசாங்கத்திடம் விண்ணப்பித்துக் கொள்கிறார்களோ, அப்படியேதான் வெள்ளைக்காரர் ஆட்சிக்காலத்திலும் அரசாங்கத்திடம் விண்ணப்பித்துக் கொண்டார்கள். அப்பொழுதிருந்த கவர்னரோ, நிர்வாக சபை அங்கத்தினர்களோ, மந்திரிகளோ மக்கள் தங்கள் குறைகளை எடுத்துச்சொல்லிய காலத்தில் வேதனைப்பட்டது கிடையாது! விம்முதல் அடைந்தது கிடையாது; தங்களைச் 'சுமை தாங்கும் மிருகங்களாக எண்ணியது கிடையாது! அந்தக்காலத்திலெல்லாம் நாட்டில் என்ன குறை ஏற்பட்டாலும், தற்குக்காரணம் அன்னிய அரசாங்கந்தான் என்றும், அந்தக குறைகளைப்போக்கவேண்டியதும் அரசாங்கத்தின் கடமைதான் என்றும், அந்தக் கடமையை அவர்கள் நிறைவேற்றித்தர மக்கள் தான் கிளர்ச்சி செய்யவேண்டும் என்றும் வற்புறுத்தியவர்கள் இன்றைய ஆளவந்தார்களே! அன்று சொல்லிக்கொடுத்த பாடத்தைச்,சொல்லிக்கொடுத்தவர்களிடத்திலேயே இன்று மக்கள் திருப்பி ஒப்புவிக்கிறார்கள். இதில் என்ன தவறு இருக்க முடியும்? பாடத்தை மறக்கும்படி மக்களை வற்புறுத்துகிறார் நிதி மந்திரி. பாடத்தை அவர்கள் ஒப்புவித்ததற்காக வேதனை அடைகிறார் இன்று. ஏன் இந்த நிலை!

"அரசாங்கம் மக்களின்றும் வேறுபட்டது என்பது தவறான கருத்தாகும்" என்று அறிவுரை கூறுகிறார் அமைச்சர். அரசாங்கம் மக்களை வேருக நடத்துகிறதா, அல்லது மக்கள் அரசாங்கத்தை வேருகக் கருதுகிறார்களா என்பது, சட்டசபை உறுப்பினர்கள் கேட்கும் கேள்விகளுக்கு, மந்திரிமார்கள் கூறும் பதில்களைக் கொண்டு எளிதில் விளங்கிக் கொள்ளலமே! விசாரணையின்றிகாவற் கைதியாக்கும் மசோதாவே, எடுத்துக் காட்டுமே அரசாங்கம் மக்களை எந்த அளவுக்கு எண்ணியிருக்கிறது என்பதை. உண்மையில், மக்கள், அரசாங்கத்திற்கு மதிப்பு கொடுத்து மரியாதை காட்டித் தங்கள் குறைகளை எடுத்துச் சொல்கிறார்கள். ஆனல் அவற்றைச் சரிவர கேட்க சம்மதிக்காத காங்கிரஸ் அரசாங்கம் மக்களை அலட்சியமாகக் கருதுகிறது

மக்கள் நியாயமான வரிகளை எல்லாம் செலுத்தாமலிருக்கிறார்கள், அவர்கள் அவற்றைச் செலுத்தினால்தான் அரசாங்கத்தை நடத்திச் செல்ல முடியும் என்கிறார் நிதி அமைச்சர். நியாயமோ—நியாயம் அல்லவோ இப்பொழுது போடப்பட்டிருக்கும் வரிகளையெல்லாம் மக்கள் செலுத்தத்தானேசெய்கிறார்கள்— செலுத்தித்தானே ஆகவேண்டும் - செலுத்தாமல் எப்படித் தப்பமுடியும்-போடும் வரியைச் செலுத்தாமல் தப்பித்தவறி வாழ எங்கே அரசாங்கச் சட்டம் இடந் தருகிறது? கேட்கும் வரிகளை எல்லாம் கொடுத்துக் கொண்டு தானே இருக்கிறார்கள் மக்கள்! கொடுத்துக் கொடுத்து வரிச்சுமை தாங்க முடியாமல் தானே ஏழை மக்கள் இன்று தவித்துக் கொண்டிருக்கிறார்கள்! உண்மை நிலை இவ்வாறு இருக்க, நியாயமான வரிகளை மக்கள் செலுத்துவதில்லை என்று ஒரு பொறுப்பு வாய்ந்த மந்திரி குற்றஞ்சாட்டுகிறாரென்றால், அதில் எவ்வளவு தூரம் உண்மை இருக்க முடியும் என்பதை ஓர்ந்து பாருங்கள்.

புதுவரி கேட்டாலோ. கட்டாயக் கடன் கேட்டாலோ எதிர்க்கிறார்கள் மக்கள் என்றும்கூறுகிறார். எதிர்க்கிறார்கள் மக்கள்—ஏன் எதிர்க்கிறார்கள்? சிந்திக்க வேண்டாமா அமைச்சர்? எதிர்ப்பது மாறுபட்ட கட்சியார் என்று மட்டும் கூற இயலாது-மக்களேஎதிர்க்கிறார்கள் என்பதை மந்திரியாரே ஒப்புக்கொள்கிறார். மக்கள் ஏன் எதிர்க்கிறார்கள். மேலும் மேலும் வரிச்சுமைகளை அவர்களால் தாங்க முடியவில்லை; ஆகவே எதிர்க்கிறார்கள், இதுகண்டு மந்திரியார் ஆத்திரப்பட்டு என்ன பயன்? எதிர்ப்பு எழாமலிருக்க ஆவன அல்லவா செய்ய முற்பட்டிருக்கவேண்டும்!

இன்றைய ஆளவந்தார்கள் சுயராஜ்ய போராட்ட' வீரர், களாக இருந்தபோது, மக்களுக்கு வாக்குறுதி தந்தனர், தங்கள் ஆட்சியில்லேவ்வித குறைபாடும் இருக்காது, எங்கும் சுபீட்சம்துலங்கும் என்று இதை மக்கள் நம்பினர்! தங்களால் அவ்வளவும் செய்யமுடியும் என்றே காங்கிரஸ் காரர்களும் நம்பினர்! இன்று ஆட்சிப் பீடம் ஏறிய பிறகு, மக்கள் கொண்ட நம்பிக்கை அழிய ஆரம்பிக்கிறது, ஆளவந்தார்களின் செயல்களால்! அது போன்றே தங்களால் ஆண்டுவிட முடியும் என்று ஆளவந்தார்கள் கொண்ட நம்பிக்கையும் அற்று வீழ்கிறது! எனவேதான் மந்திரி கோபால் ரெட்டியார் வகையற்று அழுதுகொண்டே கூறுகிறார், 'எங்களது துர்அதிர்ஷ்டம்' என்று!

மந்திரிசபை. அர்த்தமற்ற பரீக்ஷார்த்த திட்டங்களில் கோடிக் கணக்கான ரூபாய்களை ரயமாக்காமல், அவற்றைத் தடுத்து, மக்களின் உழைப்பைக் குறைக்கும்-பயனை மிகுவிக்கும் இன்பத்தைப் பெருக்கும் வழிகளில் செலவழிக்கத் துணிவு கொள்ளுமேயானால், மக்களிடம் புதுவரி வாங்கவோ சட்டாயக் கடன் கேட்கவோ வேண்டிய நிலை ஏற்பட்டிருக்காது. மக்களின் தேவையை அறிந்து செயலாற்றும் அறிவு ஆட்சிபுரியத்தொடங்குமேயானல் மக்கள் குறைகூற வழியேற்பட்டிருக்காது. தேவைகளும் சுமைகளாகத் தென்பட்டிருக்கா.

தாம் கொண்ட போக்கே போக்கு எனக்கொண்டு, ஆணவத்தை ஆட்சி புரியும்படி மந்திரிகள் விட்டுவிடுவார் களேயானல் மக்களின் குறைகள் தீர அதுவழியாகாமல் மாறாக பெருகும்! பிறகு மந்திரிமார்களுக்கு சுமைகளாகப்படும்! சுமை தாங்கு மிருகம்' என்று தங்களைத் தாங்களே கருதிக்கொள்ள வேண்டிதான் நேரிடும் மக்கள் மந்திரிமார்களை மதியுடையோர் என்று கருதத்தான் தங்கள் குறைகளைத் தெரிவிக்கிறார்கள். ஆனல் மந்திரிகள் தங்களை "சுமை தாங்கும் மிருகங்கள்" என்று மக்கள் எணணிக் கொண்டிருக்கிறார்களோ என்றுசந்தேகங் கொண்டு அவ்வுணர்வோடு தங்களைத் தாங்களே பார்த்துக்கொண்டார்களேயானல், அதற்கு மக்கள் என்ன செய்ய முடியும்!

மக்கள் மந்திரியைக் 'குறை தீர்க்கும் கோமான்' என்றுதான் எண்ணுகிறார்கள் **"சுமை தாங்கும் மிருகம்!"** என்றபடி அல்ல என்பதைஇனியேனும் நிதிஅமைச்சர் கோபாலர் உணர்ந்து நல்வழி நடக்க முயலுவாராக!

அறிவுக் கதிர்!

உனது போக்கு சரியானதென்று உனக்குத் தோன்றினல், அப்போக்குக்கான காரணங்களை உன்னல் கூற முடியுமேயானல், மக்கள் என்ன நினைப்பார்களோ என்பது பற்றிக் கவலைப்படாதே. உனது அறிவையும், மனசாட்சியினையுமே துணையாகக் கொள். எண்ணத்தை சரியாக வெளிப்படுத்த இயலாத நிலையிலுள்ளோர், சரியாக எண்ணுதலே முடியாது.

—ஸ்டாலின்

போட்டோ மூலம் பிரதி எடுக்க மிகச் சிறிய இயந்திரம்

லண்டன், டிச. 12—

புத்தகங்களிலுள்ள விஷயங்களை போட்டோ மூலம் பிரதி எடுக்கும் மிக மிகச்சிறிய இயந்திரம் யுனைடெட் ஸ்டேட்ஸில் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. மிகவும் அபூர்வமான புத்தகங்களிலிருந்து பிரதிகள் எடுக்க இந்த இயந்திரம் மிக மிக உபயோககரமாக இருக்கும். இதை யாரும் சில நிமிஷங்களில் எப்படி உபயோகிப்பது என்பதைக் கற்றுக்கொண்டு விடலாமாம். இதன் விலை 35 டாலர்களாகும். புத்தக ஓரங்களில் வளைவுகளிலுள்ள எழுத்துகளையும் விடாமல் பிரதி எடுக்க சாதனம் இதில் அமைக்கப்பட்டிருக்கிறதாம்.

வரலாற்றுச் சிறப்புடை சீனப் பெருநிலத்தில் மருந்துக்குக்கூட சியாங் ஆள் கிடையாது!

—————:(o):—————

சார்ஜு கொடுக்காது லீ பறந்தார்; தேசீய சர்க்கார் பார்மோஸா நோக்கிற்று!

சீனப் பெரு நிலத்திலிருந்து செர்ச்சப் பகுதி தேசீயவாதிகள் பார்மோஸாவுக்கு ஓடியது இந்திய சர்க்கார் நீண்ட காலமாகவே உய்த்துணர்ந்திருந்த ஒரு நிலையினை யேற்படுத்திவிட்டது. வரலாற்றுச் சிறப்புடை சீனப்பெருநம் பரப்பின் எல்லைகட்குள்ளாக தேசீய சர்க்கார் அதிகாரிகள் எவரும் இருப்பதாகவே தோன்றவில்லை. நிலைமை மேலும் மேலும் துரிதமாய் முன்னேறிக்கொண்டேபோகுமென்பதில் ஐயமில்லை; அது இயற்கையுமாகும். தேசீய சர்க்காரின் அரசியல் நிலைமை இருண்டதாகவே போய் விட்டது சிறைவில் இந்திய அரசுப் பிரதிநிதியாகிய சர்தார் கே. எம். பணிக்கர் 11-ந் தேதி மாலை கொச்சியிலிருந்து சென்னை வந்துள்ள வேளையில் இத் தகவல்களை வெளியிட்டுள்ளார்.

அமெரிக்காவுக்குப் பறந்து சென்ற ஆக்டிங் தலைவர் லீ, யாரிடமும் சார்ஜை ஒப்புவிக்காமலே சென்றிருக்கிறார்; இளவு என்னவென்பதைஇவ்வளவு தொலைவிலிருந்து உணர்ந்து கொள்ள முடியவில்லையென்று அவர் மேலும் தெரிவித்தார்.

நல்லறிஞர் ராயின் கருத்துரை நல் தொருளச்சரி கைக்கு விப்பாக இருக்கட்டும் நாளை வந்தோர்க்கு என கூறி இதனை முடிக்கிறோம்.

அணுக் குண்டு உற்பத்தியில் ஒத்துழைப்பு

லண்டன், டிச. 12—

அணுக்குண்டு உற்பத்தி விஷயமாக பிரிட்டன், யுனைடெட் ஸ்டேட்ஸ். கனடா இம்மூன்றும் ஒத்துழைப்பது என்று ஆலோசிக்கப்பட்ட வாஷிங்டன் மாநாட்டு அறிக்கையை, பிரிட்டிஷ் மந்திரி சபை ஆலோசித்து வருகிறது.

இந்த அறிக்கையில் இம்மூன்று சர்களும் ஒவ்வொரு பாகங்களின் உற்பத்தி வேலையைச் செய்யலாம் என்று குறிப்பிட்டிருக்க வேண்டும் எனத் தெரிகிறது. அணுக்குண்டு உற்பத்தி செய்யும் விஷயங்களில் அமெரிக்காமுழுக்கவனம் செலுத்துவதால் பிரிட்டன் அணுசக்தியைத் தொழில்களுக்கு எவ்விதம் பயன்படுத்துவது என்பதைக் குறித்து யோசிக்கலாம் என்ற அமெரிக்க கருத்தை ஏற்கும்படி பிரிட்டிஷ் மந்திரிசபை சிபாரிசு செய்யலாம் என்று தெரிகிறது.

சொர்ப்பனத் துயில்....

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

கொள்ளாவிடில், கம்யூனிசம் பரவுவதைத் தடுக்கமுடியா" என்று.

ஆட்சியாளர்க்கு அறிவு திருந்தா ரி பணிபத்திய நடுகள் விரிக்கும் சில திட்டில்' சி கி கிறபிழப டாடு, இவ்வுபகணை ை யு வல்லரசுகளு கு கா கொடுத்து. சிரழிககபடே கி றர் ளா னக் கே கிரோம

அரசியல், பொருளியல், குடியியல் சமத்துவமே திராவிட முன்னேற்றக் கழகத்தின் குறிக்கோள்

மாற்றுக் கட்சிக்கு மதிப்பு தருவதே மக்களாட்சிப் பண்பாகும்

மூன்றே நாட்களில் முப்பதாண்டுத் திட்டம் தயாரிப்போம்

(0)

குடந்தையில் அண்ணாத்துரை பேச்சு

(நேற்றையத் தொடர்ச்சி)

விடுதலைப் பத்திரிகைக்கு ஜாமீன், திராவிட நாட்டுக்கு ஜாமீன் என்று ஜாமீன் கேட்கிறது சர்க்கார். திராவிட நாட்டு ஜாமீன் வழக்கு கோர்ட்டுக்குப் போனது. ராஜமன்னார், சந்திராரெட்டி, பஞ்சாபிகேசசாஸ்திரி இந்த மூன்று ஜட்ஜுகள் முன்னிலையில் வழக்கு விசாரிக்கப்பட்டது. இந்த மூன்று நீதிபதிகளும் "இதற்கா ஜாமீன்?" என்றார்கள். சர்க்கார் ஜாமீன் கேட்டது. நீதிபதிகள் ஜாமீன் தேவையில்லை என்றார்கள். வெட்கம் வேண்டாமா காங்கிரஸாருக்கு? சர்க்கார் தரப்பில் அட்வகேட் ஜெனரல் ராஜா ஐயர் வாதிட்டார், "அண்ணாத்துரை கட்டுரையில் பிராமணியத்தைக் கண்டித்திருக்கிறார். அது பார்ப்பனர்களைக் கண்டிப்பதாகும்" என்றார். அதற்கு நீதிபதி ராஜமன்னார் கேட்டார், "பிராமணீயம் ஒரு முறை. அதைப் பார்ப்பனர்களும் பார்ப்பனரல்லாதாரும் கடைப்பிடிக்கிறார்கள். அப்படியிருக்கும்போது அது பார்ப்பனர்களை மட்டும் எப்படிக் கண்டிப்பதாகும்?" என்று பஞ்சாபிகேசசாஸ்திரி கேட்டார், "அண்ணாத்துரை பார்ப்பனீயம் பல ஆண்டுகளுக்கு முன்னேயே தோன்றியமுறை என்று எழுதியிருக்கிறார். எந்தக் காலத்திலோ, எவராலோ எழுதப்பட்டதை இந்தக் காலத்தில் கண்டிப்பது எப்படிக் குற்றமாகும்?" என்று ஆகவே பார்ப்பனியமுறையை அன்று மத்த வசிஷ்டரும், வியாசரும்தான் கண்டிப்பதைக் குற்றமாகக்கொள்ளலாமே தவிர, வைத்தியநாத அய்யரும், வரதாச்சாரியாரும் எப்படிக் குற்றமாகக்கொள்ளலாம்?

மாற்றுக் கட்சிக்கு மதிப்பு தருவதே மக்களாட்சி முறை

இந்தமாதம் பதினாலாந் தேதி, திருச்சி மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டில் என்மேல் வழக்கு. "ஆரியமாயை" என்ற புத்தகத்துக்காக. புத்தகம் வெளிவந்து ஏழு வருடங்களாகிவிட்டன. புத்தகமும் நாலு பதிப்பு வெளிவந்துவிட்டது. இப்போது அந்தப் புத்தகம் பிரிவினையை [illegible] 153 ஏ செக்ஷன்படி என்மேல் சர்க்கார் வழக்குத் தொடர்ந்திருக்கிறார்கள். "[illegible] ஒழிய வேண்டுமா?" என்ற புத்தகத்தை வெளியிட்ட அச்சகத்துக்கு, சர்க்கார் 3000 ரூ. ஜாமீன் கேட்டிருக்கிறார்கள். புத்தகத்தின் விலை மூன்றணா. அந்த அச்சகம் [illegible] மூன்றணா ரூபாய் சர்க்கார் 3000 ரூ ஜாமீன் கேட்டது, அச்சகத்தை மூடிவிட்டார்கள். நண்பர் இராதாவின் நாடகங்களுக்கு இந்த மாகாணம் முழுவதுமே தடை. இப்படித் தடைகள் விதித்து சர்க்கார் நடந்தால் நடத்துகிற கட்சிக்குத்தான் கண்ணியமா?

நாங்கள் தப்பாக எழுதுகிறோம் என்றால், மறுத்து எழுதட்டுமே சர்க்கார். தினமணி தினசரி, கல்கி, ஆனந்தவிகடன் பத்திரிகைகள் மறுத்து எழுதட்டுமே. ஜனநாயகம் என்றால் எதிர் புக்கு இடங்கொடுப்பதுதான். ஒரு கட்சிப் பிரச்சாரம் செய்வது குறை என்றால் அந்தக் கட்சி எப்படி நடக்கும்?

மூன்றே நாளில் முப்பதாண்டுத் திட்டம்!

திருச்சியில் காமராஜர் "அண்ணாத்துரைக்கு மூன்று மாதம் மந்திரி வேலை கொடுக்கிறோம். மூன்று நாட்கள்கூட இதை ஏற்று நடத்த முடியாது" என்று கூறினார். ஒரு இந்தி சினிமாப்படம் வந்தது, "ஏக் தின் கா சுல்தான்" (ஒரு நாள் ராஜா) என்று என்னை காமராஜர் "தின்கா சுல்தான்" ஆக்குகிறார். மூன்று நாட்களே வேண்டுமானால் கொடுத்துப் பார்க்கட்டும். அடுத்த முப்பது வருஷத்துக்குரிய சட்டத்தை நிறைவேற்றி விடுவேன். மந்திரி வேலை என்ன ஒரு கற்காப்பியா எடுத்துக்கொடுக்க? இத்தனை உழைத்துக் கஷ்டப்பட்ட பிறகு, காமராஜருக்கே அது கிடைக்கவில்லை. எனக்குத் தரப்போகிறாராம். மந்திரி வேலை எந்தக்கட்சி சட்டசபையில் பெரும்பான்மையாக வருகிறதோ அந்தக் கட்சியால் அமைக்கப்படுவது. காமராஜர் சொல்வதுபோல எவருக்கும் எடுத்துக் கொடுக்கப்படுவதல்ல.

நாங்கள் பிரச்சாரம் செய்வது ஏன் காமராஜருக்குக் கோபத்தைத் தரவேண்டும்? கள்ள மார்க்கட்காரனுக்குப் போலீஸ்காரனைக் கண்டாலே பயந்தானே வரும். தூரத்தில் காக்கிசட்டை தெரிந்தால், பதுக்கி வைத்திருக்கும் கணக்குப் புத்தகத்தை எடுத்து மறைப்பான், கள்ள மார்க்கட்காரன் அதைப்போலத்தான் இந்த அரசியல் கள்ளமார்க்கட்காரர்களுக்குத் தங்கள் பதவி பறி போய்விடுமோ என்ற பயம் உண்டாகியிருக்கிறது ஏற்படுகிறது. நாட்டு நிலை அவர்களுக்கு அடுத்த தேர்தலில் தோல்வி என்பதைத் தெரிவிக்கிறது.

கட்டிய பிறகுமா. இந்தப் பல்லவி?

அப்படித்தான் பதவி என்ன இவர்களுடைய பிதுரார்ஜித சொத்தா? மக்களால் இவர்களால்தான் முடியும், மற்றவர்களால் முடியாது என்று தரப்பட்டதா? அல்லது பதவியைப் பெறுவது பாவகாரியமா? இவர்கள் நேற்றுவரை நம்மோடு இருந்தவர்கள் தானே! அதிகபுத்திசாலிகளா? அல்லது தந்திர மந்திரத்தில் தேர்ந்தவர்களா? அடுத்த தடவை பதவி வேறு எவருக்கும் போகலாம். ஆனால் அது திராவிடர் கழகத்துக்கோ, அல்லது திராவிட முன்னேற்றக் கழகத்துக்கோ இருக்காது. கடந்த ஜில்லா போர்டு தேர்தலில் மஞ்சள் பெட்டியா, ஜெயித்தது, மஞ்சள் பெட்டிக்குப் பின்னால் இருந்த இரும்புப் பெட்டிதானே! இதைவிட அதிகமான செலவு அடுத்த தேர்தலில். தோல்வியை மனதில் வைத்திருப்பவர்கள் எங்கள் மேல் குறை சொல்வானேன்?

நாங்கள் மந்திரிக்கு அதிகமான அதிகாரம் தேவை என்றோமே தவிர, மந்திரிப் பதவி எங்களுக்குத் தேவை என்று சொல்லவில்லை. மாதவமேனனை பள்ளிகள் தேவை என்றால், பணமில்லை என்கிறார். பக்தவத்சலத்தை பாலங்கள் தேவை என்றால் பணமில்லை என்கிறார். காரணம் மதுவிலக்கால் பதினேழு கோடி ரூபாய் நஷ்டமாம். மதுவிலக்கை திராவிடர் கழகம் ஆதரிக்கிறது, திராவிட முன்னேற்றக் கழகமும் ஆதரிக்கிறது. அந்த பதினேழு கோடி ரூபாய்தான் விற்பனை வரியால் ஈடுகட்டியாகிவிட்டதே! "ஏன் தண்ணீர் இறைக்க வில்லை தோட்டத்துக்கு" என்றால், "தோண்டி ஓட்டை" என்கிறார்கள். தோண்டியை அடைத்துக் கொடுத்த பிறகும் கூடவா நீர் இறைக்க முடியவில்லை?

ஆசிய ஜோதி அமெரிக்கா சென்ற வித்தை!

நாங்கள் ஆட்சிக்கு வந்தவுடன் "பட்டாளச் செலவைக் குறைப்போம், அன்பால் ஆளுவோம்" என்று சொன்னார்கள் அப்போது இப்போது, காஷ்மீர் களத்தில் நூறு கோடி ரூபாய் செலவு செய்திருக்கிறார்கள் பட்டாளத்தின் பெயரால் இந்தப் பணத்தால் காஷ்மீரையே விலைக்கு வாங்கி விடலாம். ஒன்றரை வருடங்கள் சண்டை போட்ட பிறகு, ஐக்ய நாட்டு சபைக்கு நீதி கோரி போயிருக்கிறார்கள். சண்டையும் போட்டு முடியவில்லை. போட்டாவது முடித்திருக்க வேண்டும். இல்லாவிட்டால் முதலிலேயே சமாதானத்துக்குப் போயிருக்க வேண்டும். உடனே ஐக்ய நாட்டு சபை இது சண்டையா சச்சரவா, குழப்பமா என்று கவனிக்க ஒரு கமிஷனை அனுப்பினார்கள். இதற்குள் ஆறு மாதங்கள் கடந்து விட்டன. இந்த இலட்சணத்தில் ஆசியாவின் ஜோதி அமெரிக்காவுக்குப் போயிற்றே தவிர, அமெரிக்காவிலிருந்து போக்கிய ஜோதி இங்கே வரவில்லை! திராவிட முன்னேற்றக் கழகம் மக்களைப் பார்த்து "இதை நீங்கள் அனுமதிக்கிறீர்களா?" என்று கேட்கிறது? இதைச் சொன்னால் அடக்குவதா?

கம்யூனிஸ்டுகளை எல்லாம் சிறையில் அடைத்தாகி விட்டது. சோஷலிஸ்டுகளிலே ஒரு பகுதியினரை சிறைப்படுத்தியிருக்கிறார்கள். அவர்கள் தலைவர்களில் ஒருவரான, ராம் மனோஹர் லோகியாவை சிறையிலடைத்த பிறகு, அன்பளிப்பாக ஒரு கூடை மாம்பழத்தை அனுப்பி வைத்தார் நேரு. இப்படியெல்லாம் தடுத்தாலும் எதிர்ப்பை அடக்கி விட முடியுமா? ராதாவின் நாடகங்களுக்குத் தடை விதித்தார்கள், ஆனால் அந்த நாடகங்களின் கருத்துக்கள் நாட்டில் உலவாமலா போய் விட்டன.

பேச்சுரிமையும், எழுத்துரிமையும் காப்போம்!

இப்படித் தடை செய்த ஷிபாங்கே ஷேக்கின் விலாசம் இப்போது யாருக்காவது தெரிகிறதா? ஷிபாங்கே ஷேக் சைனாவில் ஒரு காலத்தில் சர்வாதிகாரி, பிரிட்டனின் செல்வப் பிள்ளை, அமெரிக்காவின் தத்துப்பிள்ளை, உலகத்திலேயே அதிகமான மதிப்படைந்தவன். ஆனால் மக்கள் அபிமானத்தை அடையாததால் விரட்டப்படுகிறான். அவனை விடவா நேரு, பட்டேல், ராஜேந்திரபிரசாத் எல்லாம்?

பேச்சுரிமை, எழுத்துரிமைக்கும் திராவிட முன்னேற்றக் கழகம் பாடுபட வேண்டும். திருச்சி மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டில் "ஆரிய மாயை" என்ற புத்தகத்துக்காக எனக்கு தண்டனை விதிக்கப்படலாம். தி. மு. கழகத்துக்கு அது சோதனைக் காலமாயிருக்கும் ஜனவரி மாதம் திருச்சியில் கூட இருக்கும் மகாநாட்டில் பேச்சுரிமைக்கும், எழுத்துரிமைக்கும் கேடிழைக்கப்படுவதைத் தடுக்க என்ன செய்வது, என்பது பற்றி யோசிக்கப்படும்.

மூன்றும் நிறைவேறினால்தான், முழு ஆட்சி கிடைக்கும்

மாகாண சர்க்காருக்கும் மத்திய சர்க்காருக்கும் போட்டி உண்டாக்க வேண்டும் என்ற எண்ணம் எனக்கில்லை ஆனால் ஜனநாயக மலர்ச்சி ஏற்பட வேண்டும் ஜனவரி இருபத்தாறில் புதிய அரசியல் திட்டம் அமுலுக்கு வரும். அதில் எனக்கு ஒரு மகிழ்ச்சி யாரை ஜனநாயகவிரோதி, தேசத்துரோகி, என்று காங்கிரஸார்கள் சொன்னார்களோ அதே அம்பேத்கரை இன்று போற்றுகிறார்கள்! இதற்காக திராவிட முன்னேற்றக் கழகம் மகிழ்ச்சி அடைகிறது. இந்த அரசியல் திட்டத்தைப் பற்றி அம்பேத்கார் பேசும்போது "இந்ததிட்டத்தால் அரசியல் ஜனநாயகம் கிடைத்துவிட்டது ஆனால் சமுதாய ஜனநாயகம், பொருளாதார சமத்துவம் ஏற்பட்டாலொழிய அரசியல் ஜனநாயகத்தால் பலன் இல்லை" என்று கூறியிருக்கிறார். இதைத்தான் திராவிடர் கழகம், திராவிட முன்னேற்றக் கழகம் இரண்டும் சொல்லியிருக்கின்றன. இந்த இரண்டும் இல்லாவிட்டால் கிடைத்த சுதந்திரம் நிலைக்காது என்று கூறியிருக்கிறார். இதை மக்கள் மனதில் பதிய வைத்துக் கொள்ள வேண்டும். நம் வாழ்விலேயே இந்த இரண்டையும் செய்யா விட்டால் நமக்குக் கிடைத்த சுதந்திரம் பறிமுதல் செய்யப்படும். ஜாதி வேற்றுமை கூடாது என்ற பகுத்தறிவைப் புகுத்தியவர்கள் திராவிடர் கழகம், திராவிடமுன்னேற்றக்கழகம், சுயமரியாதை இயக்கத்தவர்கள்தாம். பேதம் நீங்கினால் தான் சுதந்திரம் பறிக்கப்படாமல் சுகங்கிடைக்கும். இல்லாவிட்டால் நாடு ஈடேறாது. வெளிஉலகம் நம்மை மதிக்க வேண்டுமானால் இளைஞர்கள் ஜாதியை ஒழிக்க திராவிட முன்னேற்றக் கழகத்தில் சேர்ந்து பணியாற்ற வேண்டும்.

வரப்போகிற அரசியல் திட்டத்தில் குறையிருக்கிறது என்று எல்லாக்கட்சித்தோழர்களும் ஒத்துக்கொண்டிருக்கிறார்கள். பண்டித நேருவே கூறியிருக்கிறார். அதைப் போலவே திராவிடமுன்னேற்றக் கழகமும் தெரிவித்துக் கொள்ளுகிறது. அதைமாற்றியமைக்க செய்யும் எல்லாவிதமான நியாயமான சட்ட உரிமையான எல்லாக் கட்சிக்காரர்களோடும் சேர்ந்து உழைக்க ஆசைப்படுகிறது திராவிட முன்னேற்றக் கழகம்.

நம் சட்டசபை ஜனநாயக சபையா? எல்லோருடைய ஒத்துழைப்பும் இருக்கிறதா? இப்போதிருக்கும் நிலை என்ன? வெள்ளைக்கார ஏகாதிபத்தியத்துக்கு பதில் மஞ்சள் ஏகாதிபத்தியம், ஆங்கில முதலாளிக்குப் பதில், அஹமதாபாத் முதலாளி, இங்கிலீஷ்காரன் சுரண்டலுக்குப் பதில், அமெரிக்கக்காரன் சுரண்டல், இவைகளுக்கு மேலே மிரட்டும் நிலையில் சம்மட்டியும் அரிவாளும்! இந்த சர்க்கார் மலபார் ஸ்பெஷல் போலீஸ் வாழ்வாம். அடுத்த சர்க்கார் வருவதற்குள் இது மக்களுக்குப் பழகிவிடும். அப்போது நீக்ரோ போலீஸ் தேவையாயிருக்கும். அந்த அளவுக்கு மக்கள் தெளிவடைந்து விட்டார்கள்.

பலரும் வாருங்கள். மக்களுக்குப் பணியாற்றுவோம்!

நம் மாகாண சர்க்கார் மக்களிடம் கட்டாயக் கடன் வசூலிக்கிறது. ஆறு கோடி ரூபாய் தேவையாம். டெல்லி சர்க்கார் கொடுக்க மறுத்துவிட்டதால் மக்களைக் கேட்கிறார்கள். பத்து ரூபாய்க்கு மேல் நிலவரி கட்டுபவர்கள் ஒரு வருட நிலவரியை சர்க்காருக்கு கடனாகத் தரவேண்டுமாம். அதே நேரத்தில் பனிரண்டு கோடி

[illegible]

ஏகபோக ஆட்சியால் ஜனநாயகம் சரிந்துவிடும்

—(0)—

வறுமை நீங்காவிடில் வாழ்வில்லை

ஜனநாயக முன்னணிக் கூட்டத்தில் பண்டிதரின் ஜனநாயக உபதேசம்!

நெய்க்குத் தொன்னை ஆதாரமா தொன்னைக்கு நெய் ஆதாரமா?

அதிகாரத்தையெல்லாம் ஒரே இடத்தில்குவிக்கும்போக்கு காணப்படுகையில், தனி மனிதனின்சுதந்தரம் எப்படி காப்பாற்றப்படும் என்பதை கவனிக்கவேண்டும். இப் பிரச்னைக்குப் பரிகாரம் தேடினுல்தான், ஜனநாயகத்தை அமுல் நடத்த முடியும்.

வறுமையை ஒழிப்பதுதான் ஜனநாயக அரசாங்கத்தின் முதல் வேலையாகும். உற்பத்தியைப் பெருக்கி, நாட்டின்செல்வத்தைப் பெருக்குவதன் மூலமே வறுமையை ஒழிக்க முடியும் என்று

பருக்காபாத் பொதுக்கூட்டமொன்றில் பண்டித நேரு கூறியிருக்கிறார். பண்டிதர் பேசிய கூட்டம் "மதச்சார்பற்ற ஜனநாயக முன்னணி"யின் சார்பில் கூட்டப்பட்டக் கூட்டம். ஆகவே பண்டிதர் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் ஜனநாயகத்தின் இலக்கணம் பற்றிப் பேசவேண்டிய நிலைமையில் அவர் வைக்கப்பட்டு விட்டார் போலும்.

அதிகாரத்தையெல்லாம் ஒரே இடத்தில் குவிப்பது ஜனநாயகமல்லவாம். இதற்கு ரஷியாவை உதாரணமாகக் காட்டிப் பேசுகிறார் பண்டிதர். ரஷியா தனி மனிதனின் உரிமையை பறித்து ஆட்சி நடத்துகிறதாம். இத்தகைய முறை இந்தியாவுக்குக் கூடாது என்கிறார். நிரம்ப சரி. பண்டிதரின் பக்குவமான பேச்சை வரவேற்கிறோம். ஆனால் இப்படிப் பேசும் பண்டிதர் எங்கிருந்து கொண்டு, எந்த நிலையில் இருந்துகொண்டு பேசுகிறார் என்று கேட்கிறோம். எங்கோ ஒரு அயல் நாட்டில் தனி மனிதனின் உரிமை பறிபோவதை குறித்து வருந்தும்இவர், தன் நாட்டு நிலையை உணர்கிறாரா? இங்கு மட்டுமென்ன ஜனநாயகம் வாழ்கிறதா என்று கேட்கிறோம். பலமான மத்திய சர்க்கார் வேண்டும் என்ற காரணங்காட்டி எல்லா அதிகாரங்களும் மத்திய ஆட்சியாளரிடமே குவிக்கப்பட்டுவிடவில்லையா? இந்தப் பெரும் பணியைத் தானே கடந்த மூன்று ஆண்டுகளாக அரசியல் அமைப்பு என்ற பெயரில் செய்தார்கள் தேசியத் தலைவர்கள்! புது அரசியல் திட்டம் நிறைவேற்றப்படும்போது பல அங்கத்தினர் இப்படி மத்திய அரசாங்கத்திடம் அதிகாரங்கள் அளவுக்கு அதிகமாகக் குவிக்கப்பட்டிருக்கிறது என்பதை வன்மையாகக் கண்டித்துப் பேசியதை இதற்குள் மறந்துவிட்டார் பண்டிதர்?

ரஷியாவில் அதிகாரமெல்லாம் ஓர் இடத்திலேயே குவிக்கப்பட்டுள்ளது என்று குறை கூறும் பண்டிதரைக் கேட்கிறோம், 'ஐயா பண்டிதரே, ரஷியாவிலாவது பொதுவுடைமை என்னும் ஒரு புனிதமான கொள்கையை அடிப்படையாகக் கொண்டு அதிகாரம் ஓரிடத்தில் குவிக்கப்படுகிறது. இந்தியாவில் எந்த நல்ல கொள்கையை அடிப்படையாகக்கொண்டு அத்தகைய முறை கையாளப்படுகிறது? பாசிசத்தை வளர்க்கவா? ஏழைமக்கும் பாதுகாப்புத் தேடவா? பணமூட்டைகளுக்குப் பக்கபலமளிக்கவா? வருணாசிரம தர்மத்தை வளர்க்கவா?"

அடுத்து அவர் பேசியபோது, வறுமையை ஒழிப்பது ஜனநாயகத்தின் முதல் வேலை யென்றும், வறுமை ஒழிய வேண்டுமானால் உற்பத்திப் பெருகி, அதன்மூலம் நாட்டின் செல்வம் பெருக வேண்டுமென்று குறிப்பிட்டிருப்பதும் கவனிக்கத்தக்கது. பண்டிதரின் இந்தக் கருத்து 'நெய்க்குத் தொன்னை ஆதாரமா, தொன்னைக்கு நெய் ஆதாரமா' என்ற ஆராய்ச்சியில் இறங்கியவனின் கதைபோலவே இருக்கிறது. உற்பத்தியைப் பெருக்குவதன் மூலமே வறுமையை ஒழிக்க முடியுமென்கிறார் நேரு. வறுமை ஒழிந்தால்தான் உற்பத்திப்பெருக்கம் என்கிறது தொழிலுலகம். இதில் யார் சொல்வது சரி என்று திகைக்கின்றனர் பொது மக்கள். இதனால் நாடு மேலும் சீரழிவுக்கு ஏற்படுகிறதே தவிர புதுவாழ்வுக்கு வழியில்லை.

வறுமையை ஒழிக்க பண்டிதர் காட்டும் பாதை பயன்தரக் கூடியது என்று நாம் கருதவில்லை. அவரது கருத்துப்படியே வைத்துக்கொண்டாலும் உற்பத்திப் பெருக்கம் முதன்மையானதாகாது. உழைப்பாளிகளின் உள்ளத்தில் ஊக்கமிருந்தாலன்றோ அவர்கள் உற்பத்திப் பெருக்கத்தில் நாட்டஞ்செலுத்துவர்? அதின்றேல் அவர்கள் என்ன செய்வார்கள்? உற்பத்திப் பெருகவேண்டும், செல்வம் பெருகவேண்டும் என உபதேசம் ஆட்சியாளர், இருக்கின்ற செல்வத்தைக்கொண்டு உழைப்பாளிகளைத் திருப்தி செய்ய இதுவரை எடுத்துக்கொண்ட முயற்சிதான் என்ன? கூலி போதவில்லை என்று எந்தத் தொழிலாளி முறையிட்டாலும் அவருக்குக் கிடைப்பது கம்யூனிஸ்ட் என்ற பட்டம்! சிறைவாசம், என்ற நிலையிலல்லவே இருக்கிறது நாடு! இந்த நிலையில் உழைப்பாளிகளுக்கு ஊக்கம் பிறப்பது எங்ஙனம்? ஊக்கம் பெறாத நிலையில் உற்பத்தி பெருகுவது எங்ஙனம்? உற்பத்தி பெருகாதபோது செல்வம் பெருகுவது எங்ஙனம்? இவை அனைத்தும் பெருக தயங்கும் நிலையிலே பண்டிதர் கனவு காணும் ஜனநாயகம் பலிப்பதெங்கே?

ரஷியாவில் அதிகாரமெல்

திராவிட மாணவர்களுக்கு

இதுவரை திராவிட மாணவர் முன்னேற்றக் கழகங்கள் பல ஊர்களிலும் நிறுவப்பட்டிருக்கின்றன. இன்னும்நிறுவப்படாத ஊர்கள் டிச. இறுதிக்குள் நிறுவி உடனுக்குடன் அறிவிக்கக்கோருகிறேன். மாணவர் கிளைக் கழகங்களெல்லாம் நிறுவியவுடன் மாவட்டக்கழகம் அமைப்பதாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அத்துடன் ஜனவரி முதல் வாரத்தில் மாகாண மாநாடு நடத்த வரவேற்புக்குழு கூடவேண்டியுள்ளது. எனவே, மாணவர் கழகங்கள் இல்லாத இடங்களில் விரைவில் ஏற்படுத்தும் முயற்சியில் ஈடுபடுமாறு ஆர்வமுள்ள திராவிட மாணவர்களை வேண்டுகிறேன்.

கே. ஏ. மதியழகன்.
அமைப்பாளர்
திராவிட முன்னேற்றக் கழகம்

எவ்வளவு மணி நேரம் தூங்கவேண்டும்?

பிரஞ்சு பேராசிரியரின் கருத்து

பாரிஸ் டிச. 11—

ஒருமனிதன் எவ்வளவு மணி நேரம் தூங்கவேண்டும் என்பது விஷயமாக பிரெஞ்சு பேராசிரியர் சார்லஸ் கெட் ஆராய்ச்சிகள் செய்து சில ஸ்வாரஸ்யமான தகவல்களை வெளியிட்டிருக்கிறார்.

ஒரு மனிதன் 17 நாட்கள் இடைவிடாது தூங்காமலிருக்க முடியுமாம். 21 நாட்கள் தூங்காமலேயே இருந்த ஒருவர் மூளை சேதமடைந்து உடல் வெப்பம் குறைந்து மாண்டிருக்கிறார்.

அவர் மேலும் கூறுவதாவது: ஒருவர் 48 மணி நேரம் முதல் 600 மணி நேரம் வரையில் கஷ்டமின்றி தூங்காமல் இருக்கலாம். பகலில் தூக்கம் வந்தால் எவ்விதக்கெடுதலும் இல்லை. நன்றாக சாப்பிட்டபின் அயர்ந்து தூக்கம்வந்தால் தூங்குவதில் தவறென்ன?

15 வயதிற்குட்பட்ட குழந்தைகளும் சிறுவர் சிறுமிகளும் 10 மணி நேரமாவது தூங்க வேண்டும் வயோதிக காலத்திலும் அதிக தூக்கம் அவசியமே.

ஒரு டாக்டர் நோயாளியின் மார்பில் காதைவைத்து முப்பது வரையில் எண்ணச் சொன்னார். நோயாளி 100 க்கும் மேல் எண்ணிக் கொண்டிருந்தும் அவர் எழுந்திருக்கவில்லை பின்னர் தூங்கிவிட்டார். என்று தெரிந்தது தூங்கும்போது நாம் காணும் கனவைபேகூட நாம் சரியாக கவனம் வைத்துக் கொள்ள முடிவதில்லை. உடனடியாக அவைகளை மறந்து விடுகிறோம். —குளோப்

சிரித்து மடக்கும் சிலந்தி!

அமெரிக்காவின் அடுத்த 'அழைப்பு'

பாக். பிரதமர் புறப்படப் போகிருர்!

அமெரிக்காவிலிருந்து, அன்பழைப்பு வந்திருக்கிறது! அழைப்பையும் தான் ஏற்றுக்கொண்டு தனது மனைவிசகிதம் வருவதாக அவரும் அறிவித்துவிட்டார்.

நேரு, அமெரிக்கா சென்றது குறித்து 'அதிசய' சம்பவம் என எண்ணி நமது பத்திரிகைகள், தேசியத் தலைவர்கள் தினசரி முழக்கமிட்டன. கண்டறாதன காண்கிறோம், கிடைக்க முடியாதது கிடைக்கிறது. அழைக்காதவர்கள் அழைக்கிறார்கள் என்ற கிளர்ப்புடன் எக்காளமிட்டன! உலகின் பாருங்கள், கிடைக்காத 'பெரு வாய்ப்பு' கிடைத்தது என்று குதூகலமிட்டனர், கொக்கரித்தனர், நமது தேசிய நண்பர்கள்.

'ஆசிய ஜோதி'நேரு, அமெரிக்காவிலிருந்து திரும்பியதும், மத்திய கிழக்காசியாவை சேர்ந்த, எண்ணெய்க் களஞ்சியம் என்று புகழ் பெற்ற, இரானின் கனைத்தையும், எண்ணெய் வல்லரசுகளின் எண்ணத்தையும் கவர்ந்தவரும் பெர்சியா நாட்டின் மன்னர் அழைக்கப்பட்டார். நேருவுக்கு எந்த அளவில் அமெரிக்காவில் வரவேற்பு உபசரிப்பும் நடைபெற்றதோ, அதேபோல, இம்மிகூட மாற்றமின்றி பெர்சியா மன்னரையும் வரவேற்று, வாழ்த்தி, விருந்தாடி போற்றிப் புகழ்ந்திருக்கிறது அமெரிக்கா.

அவரது விஜயம் முடிந்ததும் அடுத்த 'அதிதி'யாக இப்போது 'அவருக்கு' அழைப்பு, வந்திருக்கிறது அமெரிக்காவிலிருந்து.

வேறு யாருக்குமல்ல! பாகிஸ்தான் பிரதமர் லியாகத் அலிகானுக்குத்தான், அமெரிக்க அரசாங்கம், அன்புடன் அழைப்பு அனுப்பியிருக்கிறது! ட்ரூமன், 'வருக' என்று அழைத்திருக்கிறார்!

இந்தியப் பிரதமர் நேரு அமெரிக்க வரும்போது அமெரிக்க அரசாங்கத்தால் அழைக்கப்படுகிறார், போக முடிவு செய்துவிட்டார், புறப்படு நாள் நிச்சயித்து விட்டார். புறப்பட்டுவிட்டார், என்ற செய்திகளைத் தருவதிலிருந்து அவரது விஜயம் பற்றிய விசேஷங்களைபுறைப்பது வரை, நமது நாட்டுப்பத்திரிகைகளும், தலைவர்களும் ஏதோ கிடைக்காதது கிடைக்கிறது பெறாதது பெறுகிறார் என்று மகிழ்ச்சி! விருத்த வெண்பாக்கள் இயற்றின! அப்போது நாம் கொன்னோம் அமெரிக்காவுக்கேற்பட்டிருக்கும் ஆசை அன்பின் விளைவல்ல இந்த அழைப்பு! இது சூழ்ச்சி! தன்வயமாக்கும் திட்டம் என்று! நாம், இதைச்சொன்ன போது சிலர், 'இதுகளுக்கே இந்த வேலை'தான் என்றனர். அவர்கள் பார்வைக்கு இந்தியாவிலிருந்து பாகிஸ்தான் பிரதமர்— அமெரிக்க புறப்படப்போகிறார் அவரையும் இந்தியப் பிரதமரையும் அழைத்து ஆசீர்வதித்த அதே அமெரிக்க ட்ரூமன் தான் அழைத்திருக்கிறார் என்பதை!

இந்தியப் பிரதமர், ஆசிய மன்னர், அதற்கு அடுத்தபடி பாகிஸ்தான் பிரதமர் என்று ஒவ்வொருவரையும் அழைத்து, உபசரிக்கிறதே அமெரிக்கா, அதில் அர்த்தமில்லாமலா இருக்க முடியும்? அவரவருக்கும், சில நாட்களும் 'விருந்' அளிக்கும் நிலையில்! நினைக்கவேண்டியிருக்கிறோம், அமெரிக்கா, சிந்து மாகாணம் சிந்திப் வருகிறார்கள் போதும் இலக்கிய, இல்லையா, என்பதை!

அரசியல்...

—[3-ம் பக்கத் தொடர்ச்சி]—

ரூபாய் ஜமீன்தாரர்களுக்கு நஷ்டஈடாகத் தரப்போகிருர்கள். அந்தப் பணத்தைக் கடனாகத் தருவதாக ஜமீன்தாரர்களுக்குச் சொல்லக்கூடாது. அந்தப் பணத்தைப் பாண்டாகத் தரக்கூடாதா? பொதுமக்களிடம் வாங்குகிற இந்த சில்லரைக் கடனுக்கு ஐந்து வருடம் பாண்டு. ஆனால் ஜமீன்தாரர்களுக்குத் தரப்போகிற பணத்துக்கு உடனே ரொக்கம். ஜமீன்தாரர்களுக்கு ஜமீனைத் தவிர தனியாக சொத்துண்டு. இந்தச் சொத்தை சர்க்காரால் தொடமுடியாது. அப்படிப் பட்ட ஜமீன்தாரர்களுக்கு ரொக்கப் பணமாம்!

அரசியலில் சமத்துவம், பொருளாதாரத்தில் சமத்துவம், சமுதாயத்தில் சமத்துவம் இந்த மூன்றும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் குறிக்கோள். Liberty, Equality, Fraternity விடுதலை, சமத்துவம், தோழமை இந்த மூன்றையும் ஒன்றாகத் தான் சொல்லுவார்கள். விடுதலை நமக்குக் கிடைத்துவிட்டது. இனி சமத்துவம், தோழமை இரண்டும் தேவை. ஜாதி, பண வேற்றுமைகள் இருக்கும்வரை தோழமை ஏற்படாது ஆகையால் சமத்துவம், தோழமை இரண்டையும் ஏற்படுத்த இளைஞர்களை, தொழிலாளர்களை, மாணவர்களை, தேசியத் தோழர்களை அழைக்கிறேன். மக்களுக்குப் பணியாற்ற."

புதுவை வட்டாரத் தோழர்கட்கு

புதுவையிலும், சுற்றுப்புறங்களிலும் நமது தி. மு. கழகத்திற்கு அங்கத்தினர் சேர்க்கும் வேலையைத் தொடங்கியுள்ளோம். அங்கத்தினர் சேர்ப்பதற்கான ரசீது புத்தகங்கள் தென்னாற்காடு மாவட்டக்கழகத்தினிடமிருந்து கிடைத்துள்ளது. இயக்க வளர்ச்சியில் ஆர்வமுள்ள தோழர்கள் யாவரும் தங்கள் நண்பர்களுடன் அங்கத்தினர் ஆண்டுகட்டணம் அணா 4 செலுத்திப் பெருவாரியாகச் சேரவேண்டுகிறோம். அங்கத்தினர் எண்ணிக்கையைவிரிவுபடுத்தியவுடன் ஆக்க வேலைகள் செய்ய வேண்டியது நிறைய இருக்கிறது. உடன் அங்கத்தினராகச் சேர வேண்டுகிறோம். அங்கத்தினர் சேர்க்கைப் புத்தகம் கீழ்கண்ட முகவரியில் உள்ளது. க. மன்னர் மன்னன், விளம்பர உறுப்பினர்- திராவிட முன்னேற்றக் கழகம் 47 தப்பசே தெரு, புதுச்சேரி.

வை. கணேசன்,
செயலாளர்
தி. மு. கழகம் புதுச்சேரி.

திராவிட முன்னேற்றக் கழகக் கூட்டங்கள்

15—12—49

தர்மபுரி :—	சி. என். அண்ணாத்துரை, ஏ சித்தையன், பெத்தாம்பாளையம் பழனிச்சாமி, ஜி. பி. சோமசுந்தரம்
பாலூர் சத்திரம் :—	எம். எஸ். சிவசாமி, இரா. சு. தங்கப்பழம், கே. வி. கே. சாமி, வெள்ளைச்சாமி.

காமன்வெல்த் மாநாட்டில் மேற்கு யூனியன் நாடுகளுக்கு மட்டுந்தான் முக்கியத்துவமா?

புறக்கணிப்பு இராதென நம்பிக்கை!

லண்டன், டிச. 12—

காமன் வெல்த் மாநாடு கொழும்புவில் நடைபெறுவதால் ஆசியா, பசிபிக் சம்பந்தப்பட்ட கொள்கை பற்றி மட்டும் தான் விவாதிக்கப்படும் என்று அர்த்தமில்லை என்றும், அந்நாட்டு விவகாரங்கள் எல்லாமே ஆலோசிக்கப்படலாம் என்று 'லண்டன் டைம்ஸ்' காமன்வெல்த் நிருபர் கூறுகிறார்.

காமன்வெல்த் பொருளாதார அமைப்புக்கும் மேற்கு யூனியன் வகுக்கும் கொள்கைகளுக்கும் எப்படி சம்பந்தம் என்கிற விஷயம் இம் மாநாட்டில் எழுப்பப்படும் என்று குறிப்பிட்டு அவர் எழுதுவதாவது :—

இவ் விஷயமாக ஒரு ஆண்டுக்கு முன்பு இருந்த சந்தேகம் பல காமன்வெல்த் நாடுகளுக்கு இப்பொழுது இல்லை என்றாலும், இவ் விஷயமாக பிரிட்டிஷ் சர்க்காரின் உத்தியோகபூர்வமான அபிப்பிராயம் என்ன என்பதை அறிய நாடுகளிடையே ஆவல் இருக்கின்றன.

எல்லாப்பொதுவான விஷயங்களையும் விவாதிப்பதே மாநாட்டின் முக்கிய நோக்கமே ஒழிய, பொதுக் கொள்கை வகுப்பது அல்ல. இப்பிரச்னைகளின் ஒருமை மனப்பான்மை காணவில் ஏற்பட்டுவிடும்.

மேற்கு யூனியனுக்கு முக்கியத்துவம் கொடுத்து காமன்வெல்த் நாடுகளின் நலன்கள் ஒரு நாளும் புறக்கணிக்கப்படமாட்டாது என்ற நம்பிக்கையை ஏற்படுத்தும் பொறுப்பு பிரிட்டனுக்கு ஏற்பட்டிருக்கிறது.

இந்தக்கொள்கை முக்கியமாக பாதுகாப்பு விஷயத்தில் அனுசரிக்கப்படும். ஆயுத சேவை வர்த்தக விஷயங்களில் காமன்வெல்த் நாடுகளுக்கே முதல் சலுகை அளிக்கப்படும் என்று தெரிவிக்கப்படலாம்.

எங்கெங்கு மேற்கு யூனியன் வர்த்தக திட்டம் காமன் வெல்த் [illegible] காமன்வெல்த் [illegible] வர்த்தக [illegible] மேற்கு யூனியனுக்கு [illegible] [illegible] பிரிட்டன் [illegible] [illegible] செய் [illegible] [illegible]கிறது.

ஆசிரியருக்கு முடங்கல்

மதி மந்திரியின் பதில்!

ஐயா,

9—12—49-ந் தேதியன்று மாலை, மதி மந்திரி மாதவமேனன் இவ்வூர் "சப் ஜெயிலை"ப் பார்வையிட வந்திருந்தார். அது சமயம் உள்ளூரிலுள்ள ஒரு தேசியத் தியாகி மந்திரியை அணுகி ஊரில் வழங்கப்படும் 'கருப்பு அரிசி'யைக் காட்டினார். அதைப் பார்த்த மந்திரி புருவத்தைச் சுருக்கி நெளித்துவிட்டு, "எனய்யா, நீர் கதர்ப்போத்தரனே இருக்கிறீர், நீர் ஏன் கருப்பு அரிசியைத் தின்னக் கூடாது? இதைப்பற்றி என்னைக் கேட்பதை விட்டுவிட்டு, நீர் பொதுமக்களிடம் சென்று 'காங்கிரஸ் ஆட்சியில் நல்ல அரிசியே வழங்கப்படுகிறது அதை யாரும் குறை சொல்லக்கூடாது' என்று ஏன் சொல்ல கூடாது" என்று ஒரு போடுபோட்டார்.

தியாகி சிறிது பின் வாங்கி, பின் நிதானமாக, 'ஐயா அவர்களே இவ்வளவு படித்துவிட்டு நான் கேட்ட சிறிய கேள்விக்குப் பதில் சொல்ல இவ்வளவு கஷ்டப் படுகிறீர்களே, நான்—படிக்காத முட்டாள்—பொது மக்களைத் திருப்திப் படுத்த எவ்வளவு கஷ்டப்படவேண்டும்—எவ்வளவு கஷ்டப்பட்டிருப்பேன் தெரியுமா"? என்று விளக்கினார்.

உடனே மதி மந்திரிக்கு தலைக்கு மேல் கோபம் வந்து விட்டது. ஒரு முறை முறைத்துப் பார்த்தார். பின் "உங்களைப் போன்றவர்களால் தான் காங்கிரஸ் பெயரே கெட்டுவிடுகிறது! எனக்கு என்ன மந்திரி வேலை சாஸ்வதமா?" என்று சீறி விழுந்துவிட்டு, அறையினுள் சிற்றுண்டி அருந்தச் சென்று விட்டார். அதற்குள் போலீஸ் இன்ஸ்பெக்டர் தலையிட்டுக் கூட்டத்தைக் கலைத்துவிட்டார்.

பொன்னேரி, 9 12-49 } இப்படிக்கு தன. மணி

அனுதாபம்

களம்பூர், டிச. 2—

"இவ்வூர் பிரபல வியாபாரியும், சுயமரியாதை தொண்டருமான தோழர் எம். எஸ். குப்புசாமி அவர்களின் வாழ்க்கைத் துணைவியார் சாந்தநாயகி அம்மன் சென்ற 26—11—49 அன்று இயற்கை யெய்தியது குறித்து அக்குடும்பத்தாருக்கு என் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்" எனத் தோழர் கே. மன்னன் எழுதுகிறார்.

மடல்விடு தூது

கனம். பக்தவத்சலம்,
மராமத்து அமைச்சர்,
சென்னை.

அமைச்சரே,

வணக்கம்.

தாங்கள் அண்மையில் பொள்ளாச்சியூரில் தமிழர் மன்றத்தில் திருக்குறள் பற்றிப் பேச நேர்ந்தபோது, அரசியல்வாதிகள் குறளைப் பின்பற்ற வேண்டும் என்று பேசியிருக்கிறீர்கள். இங்ஙனம் குறள் மீது தங்கட்கு இருக்கும் பற்றினையும், அதனைத் தாங்கள் அரசியலார்க்குத் தக்க வழிகாட்டியென எடுத்துக் காட்டி அறிவுரை புகன்றிருப்பதையும் கண்டு பெரு மகிழ்ச்சியடைகிறேன். அத்துடன் தங்கட்கு ஒன்று கூற விரும்புகிறேன். அதாவது குறளில் அரசியலார் படிக்க வேண்டிய பொருட்பாலில் "இடிப்பாரை யில்லாத வேமரா மன்னன் கெடுப்பாரிலானுங் கெடும்."

என்று ஒரு குறள் உள்ளது. அதாவது இடித்துக் கூறும் அறிஞர்கள் இல்லாத (அவர்களை விரும்பாத) ஆட்சிமுறையைப் பிறர் கெடுக்கவேண்டும் என்ற அவசியமே இல்லை; அது தானாகவே அழிந்துவிடும் என்பது இதன் பொருள். தாங்கள் மராமத்து அமைச்சர் அல்லவா? எனவே குறள் காட்டும் இந்தப் பாதையை நன்கு மராமத்து செய்து மற்ற மந்திரிமார்களும் இப்பாதையில் நடக்கச் செய்வீர்களென்று நம்புகிறேன். அத்துடன், ஆட்சியாளர்க்கு இடித்துக் கூறி அறிவுரை புகலும் எதிர்க் கட்சிக்காரர்களைக் கொஞ்சம் கண்ணியமாக நடத்தச் சொல்வீர்களென்று எதிர்பார்க்கிறேன். "அதெல்லாம் முடியாது, உங்கள் ஏடுகளைப் பறிமுதல் செய்வோம், தடைச்சட்டங்களை அள்ளி வீசிக் கொண்டேயிருப்போம்" என்று சொல்வராகில் தாராளமாகச் செய்யுங்கள் அதற்கு என்ன பலன் கிடைக்கும் என்பதற்கு மேலே எடுத்துக்காட்டிய பொய்யா மொழியே போதிய சான்றாகும்.

"எழுதுகோல்"

இனி நடப்பவை

தர்மபுரி:—இவ்வூர் தி. மு. க. கிளையின் சார்பில் 15—12—49 வியாழன் மாலை 5 மணிக்கு, இவ்வூர் எலக்டிரிக் ஆபீஸ் எதிர் மைதானத்தில் ஓர் பொதுக் கூட்டம் நடைபெறும். அதுபோது, வேளுக்குறிச்சி தோழர் ஜி. பி. சோமசுந்தரம் அவர்கள் தலைமையில் தோழர் சி. என். அண்ணாத்துரை எம். ஏ. அவர்கள் சொற்பொழிவாற்றுவார்கள்.

• • •

பாலூர்சமுத்திரம்:—இவ்வூர் தி. மு. க. கிளையின் துவக்க விழா 15-12-49 மாலை 7-30 மணிக்கு தோழர் வெள்ளைச்சாமி அவர்கள் தலைமையில் நடைபெறும். அதுபோது தோழர்கள் எம். எஸ். சிவசாமி, இரா. சு. தங்கப்பழம். கே. வி. கே. சாமி ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்.

பிரிட்டிஷ் பண்ணைகளில் குதிரைகள் குறைகின்றன!

லண்டன், டிச. 12—

பிரிட்டிஷ் பண்ணைகளில் உழுவதற்கு உபயோகிக்கப்படும் குதிரைகளின் எண்ணிக்கைகள் மிகவும் குறைந்து வருகின்றன வென்றும், 2000 ம் ஆண்டில் உழுவதற்கும் குதிரை உபயோகிப்பதைக் காண்பதே குதிரைக் கொம்பு ஆக ஆகிவிடலாம் என்று, தேசீய விவசாய ஆலோசனை சர்வீஸைச் சேர்ந்த, ஸாகடன் கூறுகிறார். 1906-19 0ல் இருந்த குதிரைகளில், மூன்றில் ஒரு பங்குகூட இப்போதில்லையாம் (ருனேசு)

போகிற போக்கில்...!

"வைதீகத்தைக் கண்டிப்பது மூலமும் மத நம்பிக்கைகளைக் கடிவது மூலமும் யாரும் முற்போக்கு வாதிய கிவிட முடியாது"

—மந்திரி மாதவமேனன்

அதெப்படி முடியும்? மக்களை முன்னேற்றுவதற்கென்றே (அழிவை நோக்கி!) பூமியில் முளைத்திருக்கும் (முளைக்கிரை என்று நினைத்து விடப்போகிறீர்கள்!) காங்கிரஸ் ஸ்தாபனம் இருக்க (உயிருக்கு மன்றாடிக் கொண்டு!) ஆயிரம் நாவு படைத்த ஆதிசேஷனாலும்வாணிக்க முடியாத- ஒரு நாவால் பேசினால் உலகமெங்கணும் கேட்காததென்ற பெற்றியினாலே- (இங்கு இலக்கியம் நயகாண்க!) பெரும்பெரும் ல சியங்கள் (அலட்சியங்களல்ல!) கொண்ட காங்கிரஸில் மாதவமேனனார்போன்ற மூற்போக்கு (எதிலும் தங்கிக் கொள்ளும் முந்திரிக் கொட்டை) சக்திகள் ஆட்சிப் பீடத்தில் (ஈ உட்காரவும் இடந்தராமல்) அமர்ந்திருக்க வேறு சிலபலர் எப்படித்தான் முற்போக்கு சக்திகளாய் ஆய்விட முடியுமென ஆணித்தரமாய் அடித்துக் கேட்க வேண்டாமா? பஞ்சாங்க புரொபஸர்களையும், நாணற் புல்லாயுத நிபுணர்களையும், சுவர்க்கத்துக்கு 'டிக்கெட்' கொடுக்கும் ஸ்டேஷன் மாஸ்டர்களையும் கண்டிப்பது பத்தாம் பசலிகள் செய்யக்கூடிய வேலையல்லவா! அணுகுண்டு காலத்திலும் மத நம்பிக்கையைக் கடியும் சக்திகளுக்கு இடமிருக்கலாமா, என்ன! மதமற்ற சர்க்கார் ஆட்சி செய்யும் காலத்திலும் மத நம்பிக்கைகளைக் குலைக்கப்படுகிறது. ஒருகூட்டமென்றால், அது மிக மிக பிற்போக்கு கூட்டமல்லவா! "ஜெய் ஹிந்த்!" "நான் இருக்க பயமேன்?"

* * *

"ஒரு வருஷத்துக்குள் ளேயே அநேகம் சாதிக்க முடியும். மேயர் பதவி காலம்பற்றி புல்லா ரெட்டி"

— செய்தித் தலைப்பு

ஏன் சாதிக்க முடியாது? ஒரு ஐம்பது பாராட்டுக் கூட்டங்கள், ஒரு பத்து பதினைந்து நகர சபை வரவேற்புக் கூட்டங்கள், ஒரு நாற்பது பிரிவுபசாரக் கூட்டங்கள்! இந்த சாதனைகள் போதாதா ஒரு வருஷத்துக்கு!

* * *

"ஆரணியில் குரங்குகள் தொல்லை"

— செய்தித் தலைப்பு

ராம ராஜ்யத்தில் சிரஞ்சீவிகள் நடமாட்டத்தைத் 'தொல்லை' என்று கூறுவது பாபாதகமல்லவோ!

* * *

"நாட்டில் ராமராஜ்யத்தை நிறுவ மகாத்மா கனவு கண்டார். அதனை நினைவாக்க பிராமணர்கள் வழி காட்டியாக விளங்க வேண்டும்"

—கே. எஸ். ராமசாஸ்திரி

நாதுராம்கோட்ஸே தனது கடமையைச் செய்துவிட்டார். மிச்ச பேர் மிச்சத்தை முடிக்க வேண்டுமென்பதுதானே!

அரபு கூட்டுப் பாதுகாப்புத் திட்டம் கைவிடப்படவில்லை

—:0:—

சிரியா மந்திரி கூறும் விவரம்

கெய்ரோ, டிச. 11—

அரபு நாடுகளின் கூட்டு பாதுகாப்புத திட்டம், கைவிடப்பட்டு வருகிறதென்று வெளியானவதந்திகளை சிரியா வெளிநாட்டு மந்திரி டாக்டர் நஸிமெல் குட்ஸி மறுத்திருக்கிறார். நகல் திட்டம் இராணுவ பொருளாதார வல்லுநர்களால் பரிசீலிக்கப்பட்டு வருகிறதென்று அவர் கூறினார்

சாவூதி மன்னரின் விசேஷ தூதருடன் இவர், கூட்டு பாதுகாப்புத் திட்டம் சம்பந்தமாகக் கலந்து பேசியிருக்கிறார்.

கப்பல்களை அணுகுண்டு அபாயத்திலிருந்து காக்கவழி

அமெரிக்கா கண்டுபிடித்திருக்கிறது

லண்டன், டிச. 11—

அணுக்குண்டு வெடித்தால் அதன் பலனாக தண்ணீரில் ஏற்படும் வெப்பம் கப்பல்களின் அடிப்பாகத்தில் சேதர்வை ரவிளைவிக்காமல் இருக்க ஒரு புதுமுறையை அமெரிக்கக் கடற்படை கண்டுபிடித்திருக்கிறது. பிகினியில் அணுக்குண்டு பரிசோதனை நடைபெற்றபோது 9 போர்க்கப்பல சேதமடைந்ததைக் கொண்டிடே இந்தப் பாதுகாப்பு முறை கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது

புது உலகத் தொழிற் சங்க அமைப்பின் நோக்கங்கள்

லண்டன், டிச. 12—

புது உலகத் தொழிற்சங்க அமைப்பின் கான்பெடரேஷன் நோக்கங்களை விளக்கி ஒரு அறிக்கையை வெளியிட்டிருக்கிறது. அதில் கூறப்பட்டிருப்பதாவது: பொருளாதாரத்துறையில் எல்லாருக்கும் பாதுகாப்பு, எல்லாருக்கும் பட்சபாதமற்ற ஒரே நீதி, அரசியல் பொருளாதார ஜனநாயகம் மூலம் சுதந்திரம், நீதி, கௌரவம் இவைகளுக்கு பங்கமேற்படாத சமாதானம்; இவைகளை ஏற்படுத்தப் பாடுபடுவது. மக்களின் சுதந்திரப் போராட்டங்களுக்கு முழு ஆதரவு அளிப்பது.

லண்டன், டிச. 12—

'எப்பொழுது சர்க்கார் இரயில்களைத் தேசியமயமாக்கிவிட்டதோ, அப்பொழுது இரயில்கள் அதன் ஸ்டேஷன்கள் எல்லாம் பொதுமக்கள் சொத்தாகிவிட்டன. ஆகவே நான் உள்ளே புக உரிமையுண்டு' என்று ஒரு பிரிட்டிஷ் ரயில்வே ஸ்டேஷனுக்குள் நுழைந்த தொழிலாளி வாதாடினார்.

அத்துமீறி உள்ளே புகுந்ததற்காக அவனுக்கு அபராதம் விதிக்கப்பட்டது

—ருனேசு

திராவிட மாணவர் முன்னேற்றக் கழகம்

நாகர்கோவில்-மாணவர்கிளை

நாகர்கோவில், நவ. 15—

இவ்வூர் திராவிட மாணவர் முன்னேற்றக் கழகத் துவக்கவிழா 4—11—49ல் தோழர் வை. சுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்றது. அதுபோது, தோழர்கள் கே. மனோகரன், எ. சிதம்பரம், என். பகவதிப்பெருமாள், வி. என். ஜான், என். பி. சிவன், சி. ஆச்சாரி ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

பிறகு "திராவிட மாணவர் முன்னேற்றக் கழகம்—நாகர்கோவில் கிளை" நிறுவப்பட்டுக் கீழ்கண்ட செயற்குழு தேர்ந்தெடுக்கப்பட்டது.

செயலாளர்:—சு. வேலப்பன்; துணைச்செயலாளர்:—என். சிவன், பொருள் உதவியினர்:—எஸ். ஆனந்தன், விளம்பர உறுப்பினர்:— எம். ஜகதீசன், என். பகவதிப்பெருமாள்.

ஏனைய செயற்குழுவினர்:— எஸ். இராமசாமி, எஸ். சிவராமன், சி. கே. பெருமாள், கே. இராமச்சந்திரன், பி. குமரேசன், ஏ. சிதம்பரம். (வி-உ)

* * *

விருதுநகர்—மாணவர்கிளை

விருதுநகர், நவ. 29—

இவ்வூர் திராவிட மாணவர் முன்னேற்றக் கழகக்கிளை அமைப்புக் கூட்டம், 21—11—49ல் தோழர் எஸ். உத்தண்டன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அதுபோது, கழகக் குறிக்கோளை விளக்கி, விருதுநகர் கல்லூரி மாணவத்தோழர்கள் சிர்மைகனி, மாக பாரதன் ஆகியோர் பேசினர். பின்பு, "திராவிட மாணவர் முன்னேற்றக் கழகம்-விருதுநகர் கிளை" நிறுவப்பட்டுக் கீழ்கண்ட செயற்குழு தேர்ந்தெடுக்கப்பட்டது.

செயலாளர்:—ஏ. கே. சாமி; துணைசெயலாளர்:— கே. முனிராசன், பொருள் உறுப்பினர்:— பி. இருட்டினசாமி, விளம்பரஉறுப்பினர்:—தமிழரசன். ஏனைசெயற்குழுவினர்:— இரா. ஜெகதீசன், இரா. தமிழன்பன, அப்துல்அஜீஸ், சி. அனந்தராசன், பி. சிர்மைகனி, பி. எம். சுந்தரராசன், ஆர். இராசமாணிக்கம், ஏ. சமுத்திர பாண்டியன். (வி-உ)

* * *

சூலூர்—மாணவர்கிளை

சூலூர், டிச. 1—

இவ்வூர் தி. மா. மு. கழ அமைப்புக் கூட்டம் 19-11-49-ல் தோழர் அப்பாதுரை அவர்கள், தலைமையில் நடைபெற்றது. அதுபோது "திராவிட மாணவர் முன்னேற்றக் கழகம்—சூலூர் கிளை" நிறுவப்பட்டுக் கீழ்கண்ட செயற்குழு தேர்ந்தெடுக்கப்பட்டது.

செயலாளர்:-வெ. ப. சண்முகம்; துணைச் செயலாளர்:-சு. இ. சிதரனர்; பொருள் உறுப்பினர்:- சு. அ. சுப்பிரமணி; விளம்பர உறுப்பினர்:-அ. அ. மணி. ஏனைய செயற்குழுவினர்:— சு. கி. துரை, சு. ர. ரங்கசாமி, சு. வே. நடராசன், சு. ர. முருகேசன, சு. கோ. சண்முக வடிவேல்.

தலைவர் முடிவுரைக்குப் பின் செயலாளர் நன்றிகூற, கூட்டம் முடிவுற்றது (வி-உ)

* * *

மதுரை—மாணவர்கிளை

மதுரை, டிச. 1—

இக்கர் தி. மா. மு. கழக அமைப்புக்கூட்டம் 20-11-49-ல் தோழர் மணிமொழியின் தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் கூத்தரசன், மது. இ. பழனியப்பன் ஆகியோர் பேசினர். பின்பு 'திராவிட மாணவர் முன்னேற்றக் கழகம்—மதுரைக்கிளை" நிறுவப்பட்டு, பின் வரும் செயற்குழுவினர் தேர்ந்தெடுக்கப்பட்டனர். செயலாளர்:—மு. கூத்தரசன். துணை செயலாளர்:—ஏ. மணிமொழியன் நிதி உறுப்பினர்:—க. தய்யணன், விளம்பர உறுப்பினர்:—வெ. சுப்பிரமணியன்.

மற்ற செயலுறுப்பினர்கள்:— செ. சாகம்பு, வெ. இளஞ்சேட்சென்னி, பழ. எழில், கு. முருகேசன், மலர்க்கண்ணன், சி. ✱. கோவிந்தன், பழனி, சாமிராசன். மேலும் சில செயலுறுப்பினர்களை சேர்த்துக்கொள்ள செயற்குழுவுக்கு அனுமதி வழங்கப்பட்டது. (வி-உ)

* * *

பொன்மலை—மாணவர்கிளை

பொன்மலை, டிச. 4—

இவ்வூர் திராவிட மாணவர்கள் 29—11—49ல் கூடி, "திராவிட மாணவர் முன்னேற்றக்கழகம்—பொன்மலைகிளை அமைத்தனர். செயற்குழுவினர்களாகக் கீழ்கண்டவர்கள தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

செயலாளர்:—சி.சந்திரசேகரன், துணைச்செயலாளர்:—சி. சண்முகம, பொருள்உறுப்பினர்:—ரா. கோவிந்தன், விளம்பர உறுப்பினர்:—இரா. சச்சிதானந்தம்.

ஏனை செயற்குழுவினர்:— தி. அப்ப துரை, பு. அனந்தகிருஷ்ணன், கே. சதாசிவம், ஜான்.

பின்பு தோழர் சி. சண்முகம் கழகம் அமைய வேண்டிய இன்றியமையாமை குறித்து சொற்பொழிவாற்றினர். இறுதியாக தோழர் அனந்தகிருஷ்ணன் நன்றி கூற கூட்டம் இனிது முடிவுற்றது. (செ—ர்)

* * *

குடந்தை—மாணவர்கிளை

கும்பகோணம், டிச. 10—

குடந்தை திராவிட மாணவர் முன்னேற்ற கழகத்தின் அமைப்பு கூட்டம 4—12—49 ஞாயிறு பிற்பகல் 3-மணிக்கு டஞ்சகரத தெரு பெரியார் மாளிகையில் நடைபெற்றது. இக்கூட்டத்திற்கு தோழர் ஏ. என். அண்ணாதுரை, எம். ஏ. அவர்களை தலைமைதாங்கி செம்மையுற நடத்தித்தருமாறு, அமைப்பாளர் தோழர் வீரா. இராசகோபாலன் அவர்கள் முன்மொழிய கல்லூரி மாணவர் தோழர் ஒளியழகனார் வழிமொழிய, அண்ணா அவர்கள் தலைமை ஏற்றபின், கீழ்கண்ட செயற்குழு உறுப்பினர்கள தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

செயலாளர்:—வீரா. இராசகோபாலன, துணைசெயலாளர்:- இளவழகன்; பொருள் உறுப்பினர்:—மு. கணேசன்; விளம்பர உறுப்பினர்:— மாணிக்கம்.

ஏனைய செயலுறுப்பினர்கள்:— நா. பாண்டுரங்கன், ச. தெய்வசிகாமணி, பா. மாணிக்கவாசகன், முருகு. மாணிக்கம், இரா. இலக்குவன், க. ஆனந்தராசன், இராமசந்திரன், சொக்கலிங்கம், நா. கண்ணையன், தருமராசன், இரா. பெரியசாமி, நா. கோவிந்தராசன், அவர் தச்சாமி, தனராசன், ஒளியழகன், இரா. திருநாவுக்கரசு, சு. குமாரராசன். பின் தோழர் வி. எஸ். ஏ. அமுதம் அவர்களால் கொண்டுவரப்பட்ட சில தீர்மானங்கள், தோழர் மாணிக்கவாசகம் வழிமொழிய ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன. (வி-உ)

சந்தாதாரர்களுக்கு

தாங்கள் எழுதும் கடிதங்களில் அனுப்பும் மணியார்டர்களில் தங்கள் சந்தா நம்பரைக் குறித்து எழுதும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

"மாலை மணி" நிர்வாகி

K. R. ராமசாமியின்
கிருஷ்ணன் நாடக சபையாரின் நாடகம்
ஈரோடு, அர்ச்சுனன் அரங்கில்
13-12-49 செவ்வாய் முதல் 1 வாரம் மட்டும்
K. R. ராமசாமி நடிக்கும்
"மனோஹரா"
நாடகப் பேராசிரியர்: P சம்பந்த முதலியார் எழுதியது
தினசரி இரவு 10 மணிக்கு ஞாயிறு மாலை 6-30 மணிக்கு
திங்கள் விடுமுறை
கட்டணம்: 2-8-0, 1-8-0 0-12-0, 0-6-0.

வாலாஜாபாத் பாடசாலைக்கு பெருமக்கள் வருகை

கட்டிட நிதிக்கு 4000-நன்கொடை

வாலாஜாபாத், டிச. 12—

சென்னை தோழர் வி. கே. சாமி அவர்கள் வாலாஜாபாத இந்துமத பாடசாலைக்கு 9-12-49 அன்று வருகை புரிந்தார். தோழர் சாமி அவர்களுடைய சிறந்த திறமையைப் பற்றியும் நாட்டுக்கும் அவருக்கும் பரவியிருக்கும் புகழைப் பற்றியும் மாணவர்களுக்கு அறிமுகம் செய்து வைக்கப்பெற்றது. மாணவர்களுடைய பயிற்சிகளில் சிலவற்றையும் பாடசாலையில அமைப்பு முறைகள் முதலியவற்றையும் அவர் பார்வையிட்டு மிகவும் மகிழ்ந்தனர். பாடசாலையில் புதிய கட்டிடத்தில் தமமுடைய பெயராலும் மனைவி கீதவாணி என, சி. வசந்தகோகிலம் அவர்கள் பெயராலும் ஒரு அறை அமைப்பதற்கு ரூ 2000. அளிப்பதாக தோழர் சாமி அவர்கள் வாக்களித்தார்கள்.

சினிமாப்பட விநியோகஸ்தர்களான குடியேற்றம் பயனீர் பிக்சர்ஸ் லிமிடெட்—கம்பெனியைச் சேர்ந்த தோழர்கள் பி. எஸ். கிருஷ்ணமூர்த்தி, கே. ஆர். சம்பந்தமூர்த்தி, வி. எஸ. தாமலிங்கம், எம. வி. சாமிநாதனார் ஆகியோர்களும், வேலூர் ஆனந்தா பிக்சர்ஸ் கம்பெனியைச் சேர்ந்த தோழர் இலட்சுமணனார் முதலியவர்களும் காகித பிரபல வியாபாரியும், வட ஆற்காடு ஜில்லா போர்டு உறுப்பினருமான தோழர் பி. எஸ். பாலாஜி அவர்களும் 8—12—49 வியாழக்கிழமை இரவு வாலாஜாபாத இந்துமத பாடசாலைக்கு வந்தார்கள். மாணவர்களுடைய பேச்சு, பாட்டு, நடிப்பு முதலியவைகளையும், விரதசாரி விளையாட்டுகள், யோகாசனங்கள் முதலியவற்றையும் பார்த்து யாவரும் மகிழ்ந்தார்கள். பயனீர் பிக்சர்ஸ் லிமிடெட் உரிமையாளர்கள பாடசாலைக் கட்டிடத்தில தங்கள கம்பெனி பெயரால ஒரு அறை அமைப்பதற்கு ரூ. 2000- அளிப்பதாக வாக்களித்தார்கள.

பாடசாலைச் செயலாளர் தோழர் வா. தி. மாசிலாமணி அவர்கள், யாவருக்கும நன்றி கூறினார்கள்.

கழகத் தோழர் கண்டு கிலி!

திருச்சி, டிச 10—

திருச்சி, தி. மு. க. காலனி, கிளையின் செயலாளர் தோழர் ஜி. அய்யாதுரை அவர்களை போலீசார் 20—11—49ந் தேதி 151 வது செக்ஷன் கீழ் கைது செய்து 15 நாள் ரிமாண்ட் கொடுத்து 5—12—49-ந் தேதி எவ்வித விசாரணையுமின்றி விடுதலை செய்து விட்டனர்.

போலீசார் 20-11-49-ந் தேதி இரவு சுமார் 4-மணிக்கு தோழர் அய்யாதுரை அவர்களின் இல்லத்தை சோதனை செய்து பார்த்தனர். சந்தேகத்திற் கிடமான எதுவும் கிடைக்கவில்லை.

வானொலி

(14-12-49 புதன்கிழமை)

சென்னை

[211·3 மீட்டர்கள்]

காலை:

7-15 தமிழில் செய்திகள்
7-30 லக்ஷ்மிசுந்தரம்—வீணை
8-00 ஆங்கிலத்தில் செய்திகள்
8-15 சினிமாப் பாட்டுகள் (இ.த.)
8-30 ஜயலக்ஷ்மி ஜகன்நாதன்—பாட்டு

பிற்பகல்:

12-30 மத்தியப் பள்ளிகளுக்கு
1-00 மாதர் நிகழ்ச்சி
1-30 ஆங்கிலத்தில் செய்திகள்
1-40 சினிமாப் பாட்டுகள் (இ.த.)
2-00 தமிழில் செய்திகள்
2-15 உயர்தரப்பள்ளிகளுக்கு
2-45 குரல்வகை (இசைத்தட்டு)

மாலை:

4-00 ஆரம்பப்பள்ளிகளுக்கு
5-30 டி. அன்னபூரணிதேவி விதார்
6-00 ஆங்கிலத்தில் செய்திகள்
6-20 ரதனம்மா கிருஷ்ணமூர்த்தி—பாட்டு

இரவு:

7-00 டி. எஸ். மஹாதேவய்யர்—பாட்டு
7-15 தமிழில் செய்திகள்
7-30 பி. ருக்மிணி—வீணை
7-45 மாகாண அபிவிருத்தி—பேச்சு
9-00 ஆங்கிலத்தில் செய்திகள்
9-15 கே. ஆர். கணபதி—புல்லாங்குழல்
9-45 என. கோபாலகிருஷ்ணன்—புல்லாங்குழல்
10-15 குரல்வகை (இசைத்தட்டு)
10-30 முடிவு

திருச்சி

[395·8 மீட்டர்கள்]

காலை:

7-15 தமிழில் செய்திகள்
7-30 சி. சிங்காரவேலு—வயலின்
8-00 ஆங்கிலத்தில் செய்திகள்
8-15 காலை இசை (இசைத்தட்டு)
8-30 எஸ். வேணுகோபால்—பாட்டு

பிற்பகல்:

12-30 மத்தியப்பள்ளிகளுக்கு
1-00 கதம்பம் (இசைத்தட்டு)
1-30 ஆங்கிலத்தில் செய்திகள்
1-40 எஸ். வேணுகோபால்—பாட்டு
2-00 தமிழில் செய்திகள்
2-10 என். கே. துரைக்கண்ணு-நாகஸ்வரம் இசைத்தட்டு
2-15 உயர்தரப்பள்ளிகளுக்கு

மாலை:

4-00 ஆரம்பப்பள்ளிகளுக்கு
5-00 கே. சங்கரி அம்மாள்-பாட்டு
5-40 இசைப்பயிற்சி
6-00 ஆங்கிலத்தில் செய்திகள்
6-15 சித்ரகானம் (இசைத்தட்டு)
6-30 கிராம நிகழ்ச்சிகள்

இரவு:

7-15 தமிழில் செய்திகள்
7-30 விளம்பர விசித்திர-நாடகம்
8-00 இசைத்தொகுப்பு
8-20 கே. சங்கரி அம்மாள்-பாட்டு
9-00 ஆங்கிலத்தில் செய்திகள்
9-15 சி. சிங்காரவேலு-வயலின்
9-35 இசைக்கோவை (இசைத்தட்டு)
10-0 முடிவு

குடிபுகாதத்தை ஒழித்து, பார்ப்பனியத்தைப் புதைத்து, சுரண்டல் கூட்டத்தை ஒடுக்கி, பாட்டாளிகளை வாழ்விக்க மதுரையிலிருந்து...

சங்குநாதம்
திராவிட முன்னேற்ற வாரஇதழ்
ஆசிரியர் குழு:—
பெரி. சுவாமிநாதன், மதுரைமன்னன், க. சி. அரியபெருமாள்

1—1—50 முதல்
ஞாயிறு தோறும் வெளிவரும்
தனிப் பிரதி 0-1-6
ஆண்டு சந்தா 4-8-0
எல்லா ஊர்களிலும் முன் பணம் கட்டக்கூடிய தீவிர நோக்கமுள்ள விற்பனையாளர்கள் தேவை.
விவரங்கட்கு:— நிர்வாகி,
'சங்குநாதம்' அலுவலகம்,
166, வடக்குமாசி வீதி, மதுரை.

ஸ்டர்லிங் கடன் பற்றி புது யோசனை

லண்டன், டிச. 11—

ஸ்டர்லிங் கடனைத் தீர்க்கும் விஷயமாக இதுவரை கையாளப்படாத ஒரு புது சமரச வழியைக் கொண்டு தீர்க்க பிரிட்டிஷ் சர்க்கார் உத்தேசித்திருப்பதாக காமன்வில் சர்க்கிலஸ் வெளியிட்ட அறிக்கையிலிருந்து அனுமானிக்கலாம் என்று 'ஸ்டேடிஸ்ட்' என்ற பத்திரிகை கூறுகிறது.

ஒரே தடவையில் முடிவுசெய்து ஸ்டர்லிங்கடனை குறைக்க முற்பட்டால் பிரிட்டிஷ் நாணயங்களுக்குப் பாதகம் ஏற்படும் எனவும், ஆகவே சம்பந்தப்பட்ட இதர் இனங்களின் சம்மதத்தின் பேரில் உகந்த முறையில் இதற்கான வழி கண்டுபிடிக்கப்பட வேண்டும் என்றும் அப்பத்திரிகை கூறுகிறது. —ஞோப்

மறைவு

சென்னை, டிச. 12—

இந்தி எதிர்ப்புத் தோழியர் எஸ. வி. டி. சண்முகத்தாய் அவர்களின் தந்தையும்; சமதர்மத் தோழர் எஸ. வி. டி. இராமமணி அவர்களின் மாமனுமான ஆத்துக்குடி எஸ். வேலமுதலி அவர்கள் நேற்று இரவு இயற்கை எய்தினார்கள்.

சந்தா விவரம்

(உள்நாடு)

ஒரு மாத சந்தா	ரூ.	2—0—0
மூன்று மாத சந்தா	ரூ.	6—0—0
ஆறு மாத சந்தா	ரூ.	12—0—0
ஒரு வருட சந்தா	ரூ.	24—0—0

மூன்றுமாதத்திற்குக் குறைந்த சந்தா ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.
வி. பி. மூலம் அனுப்ப இயலாது.

(வெளிநாடு)

மலேயா, பர்மா முதலிய இடங்களுக்கு:—

ஒரு மாத சந்தா	ரூ.	3—0—0
மூன்று மாத சந்தா	ரூ.	9—0—0
ஆறு மாத சந்தா	ரூ.	18—0—0
ஒரு வருட சந்தா	ரூ.	36—0—0

மூன்று மாதத்திற்குக் குறைந்த சந்தா ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.
வி. பி. மூலம் அனுப்ப இயலாது
மானேஜர், "மாலை மணி"

Printed & Published by T. M. Parthasarathy at the Mercantile Press, 2/45, Muthumari Chetty Street, Madras-1.